வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 23.08.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 236 பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# உள்ளூராட்சித் தேர்தலை கூடியவிரைவில் நடத்துக!

## உயர் நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

### தேர்தல் ஒத்திவைப்பு மக்களின் அடிப்படை உரிமை மீறல்
### தேர்தல் ஆணைக்குழு, ஜனாதிபதி தவறிழைப்பு எனவும் சாடல்

கொழும்பு, ஓகஸ்ட் 23

2023ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிற்போடப்பட்டதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமைகளை தேர்தல் ஆணையாளர் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளும் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியும் மீறியுள்ளனர் என உயர்நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பளித்துள்ளது.

இதற்கமைய கூடிய விரைவில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் திட்டமிடப்பட்ட வகையில் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படாமையின் ஊடாக அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் தீர்ப்பே நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையம், பவ்ரல் அமைப்பு என்பன தாக்கல்

11

# சட்டத்தை புறக்கணிக்கும் அரசாங்கம் ஆபத்தானது!

### உயர்நீதிமன்ற தீர்ப்பின் பின் சஜித்

கொழும்பு, ஓக. 23

சட்டத்தை நிலைநாட்ட முடியாத அரசாங்கத்தால் ஒரு தேசத்தை கட்டியெழுப்ப முடியாது என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சட்டத்தை புறக்கணிக்கும் அரசாங்கம் திறமையற்றது மாத்திரமல்ல அது ஆபத்தானது எனவும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பிலான நீதிமன்ற தீர்ப்பின் பின்னர் சமூக ஊடகத்தில்

11

# குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டோரை அரச உயர் பதவிகளிலிருந்து நீக்குக!

கொழும்பு, ஓக. 23

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என நம்பகத்தன்மை மிக்க விதத்தில் குற்றஞ்சாட்டப்படுபவர்களை உயர் பதவிகளில் அமர்த்தக்கூடாது. அவர்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அது நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்- அரசாங்கத்தின் உயர் பதவிகள், பாதுகாப்பு

11




# தென்னாபிரிக்க தூதுவரை சந்தித்தார் சிறீதரன் எம்பி.!

கொழும்பு, ஓக. 23

இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் சாண்டில் எட்வின் ஷால்க், துணைத் தூதுவர் றெனி எவர்சன் வர்ணி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோருக்கு

11

# அதிகாரப் பகிர்வு, பொறுப்புக்கூறலை புதிய ஜனாதிபதி மேம்படுத்தவேண்டும்

### இலங்கையிடம் கோருகின்றது ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம்

ஜெனிவா, ஓக. 23

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் அரசியல் அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை மேம்படுத்துவதற்கும் தேவையான அடிப்படையான அரசியல் யாப்பு மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களை முன்னெடுக்கவேண்டும் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலை குறித்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் முழுமையான அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தேர்தல்களையடுத்து புதிதாக தெரிவு செய்யப்படும்

11

### தமிழ்ப் பொதுவேட்பாளரின்
# 'நமக்காக நாம்' தேர்தல் பிரசார பயணம் சக்கோட்டையில்!

யாழ்ப்பாணம், ஓக. 23

தமிழ்ப் பொதுவேட்பாளரின் 'நமக்காக நாம்' தேர்தல் பிரசாரப் பயணம் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் சக்கோட்டை கொடிமுனையில் இருந்து ஆரம்பாகவுள்ளது.

11

# புதிதாக காணிகள் கைவசப்படுத்துவதை இலங்கைப் படையினர் நிறுத்தவேண்டும்!

### ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வலியுறுத்து

ஜெனிவா, ஓக. 23

இலங்கை இராணுவம் தன்வசம் வைத்திருக்கும் காணிகளை விடுவிப்பதுடன் புதிதாக காணிகளை கைவசப்படுத்துதலை நிறுத்தவேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்டுள்ள முழுமையான அறிக்கையிலேயே இந்த

11

# 35 நாடுகளின் பிரஜைகள் இங்கு வர இலவச விஸா!

கொழும்பு, ஓக. 23


35 நாடுகளின் பிரஜைகள் இலவச விஸா வசதியின் கீழ் இலங்கைக்குப் பிரவேசிப்பதற்கு அமைச்சரவை

11

ஒரு புள்ளடி நிமிரும் தலைமுறை

ஜனாதிபதித் தேர்தல் - 2024

"பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிஜ மென்று சங்கே முழங்கு"





தமிழ்ப் பொதுவேட்பாளர்

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு பா.அரியநேத்திரன்

(கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களின் அடிப்படை சம்பள அதிகரிப்புக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஒக. 23

2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அனைத்து அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அரச சேவையில் உள்ள சம்பள முரண்பாடுகள் தொடர்பான நிபுணர் குழுவின் தலைவர் உதய செனவிரத்ன தெரிவித்தார்.

இதன்படி, குறைந்த தரங்களுக்கு 24 வீதமாகவும், மற்ற பதவிகளுக்கு 24 வீதம் முதல் 35 சதவீதமாகவும் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

சம்பளத்தை அதிகரிக்கும் போது தகுதி, அனுபவம் மற்றும் அவர் தற்போது செய்து வரும் பணி குறித்து பரிசீலிக்கப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.(எ)

# இவ்வருடம் வர்த்தக பொருட்களின் ஏற்றுமதி செயல்திறன் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 23

இந்த வருடத்தின் ஜூலை மாதத்தில் வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி செயல்திறன் 1,087. 6 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இது, கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடும் போது 6. 58 வீத அதிகரிப்பாகும் என அந்த சபை தெரிவித்துள்ளது.

ஆடைகள் மற்றும் துணிகள், தேயிலை, தேங்காய் சார்ந்த பொருட்கள், மசாலா பொருட்கள் மற்றும் கடல் உணவுகள் ஆகியவற்றின் ஏற்றுமதி வருவாய் அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும் என ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.(எ)

# யுத்தத்தின் பின்னராக இலங்கையில் மோதலை தூண்டும் முக்கிய காரணியாக காணி பிரச்னை!

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக. 23

யுத்தம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்டதன் பின்னரான இலங்கையில் மோதலுக்குத் தூண்டுதலளிக்கும் மிகமுக்கிய காரணியாகக் காணிப்பிரச்னை காணப்படுவதாகவும், இதற்கு உடனடியாகத் தீர்வு காணத்தவறும் பட்சத்தில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் தீவிரமடைவதுடன், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளில் பாரிய பின்னடைவு ஏற்படும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் எச்சரித்துள்ளது.

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்து வரும் நில அபகரிப்புக்கள் மற்றும் அவை அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் பற்றி விரிவான விளக்கத்தையும், இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய பரிந்துரைகளையும் உள்ளடக்கி மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் "இலங்கையில் காணிப் பிரச்னையின் குறுக்குவெட்டு (ஒன்றுக்கொன்று தொடர்புடைய) போக்கு" எனும் தலைப்பில் 95 பக்க அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்களின் பின்னரும் இனங்களுக்கு இடையிலான பிளவுகள் தொடர்வதுடன், யுத்தத்துக்கான அடிப்படைக் காரணிகள் இன்னமும் களையப்படவில்லை. அதன் ஓரங்கமாக பல தசாப்தகால காணிப் பிரச்னை யுத்தத்தின் பின்னரும் தொடரும் அதேவேளை, இவ்விடயத்தில் பல்வேறு வழிமுறைகளில் நிகழும் அரச தலையீடுகள் நல்லிணக்க செயன்முறையில் பின்னடைவை ஏற்படுத்தக்கூடியவாறான பிளவுகளைத் தோற்றுவித்துள்ளன என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் பதிவாகி, தற்போதும் தொடர்ந்துவரும் காணிப்பிரச்னைகள் குறித்தும் அறிக்கையில் தனித்தனியாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் விவரிக்கப்பட்டிருக்கும் காணிப் பிரச்னைகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், அதன் பின்னணியில் பரந்துபட்ட அளவிலான சட்ட மற்றும் கொள்கைசார் கரிசனைகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ள மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ஆட்சியியல் நிர்வாக மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளல், மோதலுக்குத் தூண்டுதலளிக்கும் காரணிகளைக் களைதல், அவசியமான சட்ட மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல், காணி அபகரிப்புக்களால் எதிர்மறையான பாதிப்புக்களுக்கு உள்ளானோருக்கு உரியவாறான இழப்பீட்டை வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. (அ)

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 23

நல்லூர் கந்தசுவாமி கோவில் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5. 30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை நவாலி கதிர்காம முருகன் பஜனைக் குழுவினரின் நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (எ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 23

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டு நாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

நல்லூர் பிரதேச செயலகக் கணக்காளர் திருமதி தர்மாம்பிகை ஆனந்தகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மஸ்ரீ சர்வேஸ்வர ஐயர் பத்மநாப சர்மா பிரதம அதிதியாகவும் சிவப்பணிச்செம்மல், முனைவர் வே. சங்கரநாராயணன் கௌரவ அதிதியாகவும் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஜானகி அம்பாள் தர்மஜீலன் மற்றும் யாழ் வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு நாகமணி சபாநாயகம் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

கோண்டாவில் கைலாச நாத வேத சிவாகம அறநெறிப் பாடசாலை, ஸ்ரீ முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை, கொக்குவில் மஞ்சவனப்பதி அறநெறிப் பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விஷேட நிகழ்வாக விஜயகுமாரசர்மா மதுராங்கினி வழங்கும் இசைக்கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (எ)

# கெஹலிய உள்ளிட்ட நால்வரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, ஒக. 23

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உட்பட நால்வரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுளின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கடந்த பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

# மாணவிக்கு நீதிகோரி மௌனப் போராட்டம்!



மொனராகலை, ஒக. 23

மொனராகலை, தனமல்வில வில் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவியை கூட்டு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் 17 பேரும், அதற்கு உதவிய பெண்ணும் நேற்று வெல்லவாய நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில், மாணவிக்கு நீதி கோரி வெல்லவாய நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக மௌனப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இதேவேளை, குறித்த போராட்டம் தொடர்பில் செய்தி சேகரிக்க வந்த ஊடகவியலாளரை அந்தப் பகுதியில் நின்ற நபர் ஒருவர் தாக்க முயன்றுள்ளார்.

அத்தோடு, அந்த நபர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தியதையடுத்து பொலிஸார் தலையிட்டு குறித்த நபரை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். (எ)

# வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு நிதியுதவி வழங்க புரிந்துணர்வு உடன்படிக்கை





கொழும்பு, ஒக. 23

வடக்கு மாகாணத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜி. ஜி. பி. திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேயகி, சார்ப் திட்ட பணிப்பாளர் சுமதி ரஞ்ஜன் பாலசூரிய மற்றும் டாஸ் அமைப்பின் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் ஆனந்த சந்திரசிறி ஆகியோருடன் இணைந்து கைச்சாத்திட்டார்.

வடமாகாணத்தில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு தனது ஆதரவை விரிவுபடுத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் இந்த இரண்டு திட்டங்களுக்காக மொத்தம் 1,007,194 அமெரிக்க டொலர்களை (சுமார் 300 மில்லியன் ரூபாய்) வழங்கியுள்ளது. 2002ஆம் ஆண்டு முதல் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் ஜப்பான் ஒரு பிரதான நன்கொடையாளராக உள்ளதுடன், மொத்த உதவித் தொகை 46 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியுள்ளது.

சார்ப் மற்றும் டாஸின் திட்டங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மொத்தம் 6,304 பயனாளிகளுக்கு மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதார உதவிக்கு பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போர் காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தியானது இலங்கைக்கான ஜப்பானின் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக் கொள்கையின் முன்னுரிமைப் பகுதிகளில் ஒன்றாகும்.

கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளில் முன்னணி நன்கொடையாளராக ஜப்பான் அரசாங்கம் தனது பங்களிப்பை ஆற்றி வருவதாகவும், கண்ணிவெடி பாதிப்பு இல்லாத இலங்கையை அடைவதற்குத் தேவையான ஆதரவைத் தொடர்ந்து வழங்கும் என்றும் ஜப்பான் தூதுவர் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.08.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், ஆவணி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எது துரோகம்?

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ் தேசிய மக்கள் முன்னணி) கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று கூறி, பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றார். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை என்றாலும் கூட, ஒரு பொய்யை தொடர்ந்து சொன்னால் ஒரு கட்டத்தில் அது உண்மையாக்கிவிடலாம் என்னும், கிட்லரின் காரியதரிசியான கோயபல்ஸ் பாணியில் செயல்பட்டு வருகின்றனர்.

15 வருடங்களாக ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு செயல்பட்ட தரப்புக்களே, தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்தியிருப்பதாகவும், தமிழ் பொது வேட்பாளரின் முடிவு, ஐம்பதாயிரம் மாவீரர்களுக்கும் உயிரிழந்த பொதுமக்களுக்கும் செய்யும் துரோகமாகும் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். ஒற்றையாட்சிக்குள் தேர்தலில் போட்டியிடுவது துரோகம் என்றால், அந்தத் துரோகத்தை செய்து கொண்டே, மற்றவர்களை நோக்கி துரோகக் கற்களை வீச முடியுமா?

இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து அரசியல் நடவடிக்கைகளுமே, ஒற்றையாட்சிக்குள்தான் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த ஒற்றையாட்சிக் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டுதான், முன்னணி பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, ஆறாவது திருத்தச்சட்டத்தின் கீழ் சத்தியப்பிரமாணம் செய்து, பாராளுமன்ற உறுப்பினர் என்னும் அந்தஸ்தை பயன்படுத்தி, தங்களின் கட்சிக்கான செல்வாக்கை அதிகரிப்பதற்காக செயல்பட்டுவருகின்றது. ஒற்றையாட்சிக்குள் கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி, தமிழ் தேசிய அரசியல் பேசுவதும் ஒரு வகை துரோகம் என்றும் கூறமுடியுமல்லவா?

தமிழ் பொது வேட்பாளர் என்பது, இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் களத்தை, தமிழ் மக்களின் பிரச்னை இப்போதும் எரியும் பிரச்னையாகவே இருக்கின்றது - யுத்தத்தின் முடிவுடன், அனைத்தும் முந்துவிடவில்லை - முடித்துவிடவும் அனுமதிக்க மாட்டோம் என்று சொல்வதுடன், கட்சி அரசியலால் சிதறடிக்கப்பட்ட தமிழ் மக்கள் கூட்டத்தை மீண்டும், ஓர் அரசியல் நகர்வின் ஊடாக ஒரணியாக்குவதற்கான முயற்சியாகும். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான குரலை ஓங்கியொலிப்பதும், சிதறடிக்கப்படும் தமிழ் மக்களை ஓர் அரசியல் சமூகமாக ஒன்றுபடுத்தவும், வரவுள்ள பாராளுமன்ற தேர்தலில், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை முடிந்தவரையில் பாதுகாப்பதற்கு முயற்சிப்பதற்கான ஒரு புதிய அரசியல் நகர்வாகும். இது எவ்வாறு துரோகமாக முடியும்?


அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்னும் பெயருக்கான முகமூடியாகவே 'தமிழ் தேசிய மக்கள் முன்னணி' பயன்படுத்தப்படுகின்றது. அவ்வாறாயின் அதுவும் கூட தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் ஒரு துரோகம்தான் - அதாவது, இலங்கைத் தேசியத்தை முதன்மைப்படுத்துவதற்கான யாப்பு ஏற்பாட்டைக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியின் மூலம் எவ்வாறு தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்ய முடியும்? தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வது உண்மையாயின், முதலில் கட்சியின் யாப்பை சட்டரீதியாக மாற்றியிருக்க வேண்டுமல்லவா - ஆனால், அதனை இன்றுவரையில் செய்யவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ் தேசியத்தின் பெயரால், தமிழ் மக்களின் வாக்குகளை பெறுபவர்கள், அந்த வாக்குகளுக்கு விசுவாசமானவர்களாக இருக்க வேண்டும் என்பதையே நாம் இந்த இடத்தில் வலியுறுத்த முடியும். முன்னணியின் பெயரால் இயங்குபவர்களுக்கு ஆதரவளிக்கும் புலம்பெயர் அமைப்புக்கள், இனியாவது சிந்திக்க வேண்டும். உண்மையில் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் சுமந்திரன்களும் கஜேந்திரன்களும் ஒரு நேர்கோட்டிலேயே செயல்பட்டுவருவதாக தெரிகின்றது.

## நல்லூரரான் திருவடி - 15

சுஸந்த வீரபெரும

# புத்த பகவானைப்போன்ற யோகரின் இராஜகம்பீர தியான தோற்றம்!



ஒரு தடவை அடியாரொருவர் யோக சுவாமிகளின் குடிலுக்குள் வந்து ஒரு தீபத்தை ஏற்றினார். சில மல்லிகை மலர்களை நிலத்தில் தூவினார். பின்னர் தரையில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து யோகரின் பாதங்களை முத்தமிட்டார். அப்போது யோகர் அந்த நபரை நோக்கி, "சுத்த முட்டாள்! இது சந்நிதானமல்ல. நீ என்னைக் கும்பிடுகிறாயா? அல்லது உன்னைக் கும்பிடுகிறாயா? ஏன் நாம் இன்னொருவரைக் கும்பிடவேண்டும்?" என்று உரக்கக் கூறினார்.

"இன்னொருவரை கும்பிடுவதால் கடவுளைக் காணலாம் என்று நினைக்கின்றாயா? பூக்களை வைத்து தீபத்தை ஏற்றி வீண் வேலை செய்யாதே. இலஞ்சம் கொடுத்து கடவுளைக் காணலாம் என்று நினைக்கிறாயா?" என்று யோகர் மேலும் கூறினார்.

யோகர் தன்னை வணங்குவதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறியதோடு, தனது நெஞ்சை அழுத்தி மீண்டும் உரத்த குரலில், "இறைவன் இங்கிருக்கிறான்", என்றார். பின்னர், அவர் மீளவும் கண்களை மூடி யோக நிலையில் லயித்திருக்கலானார். இவ்வாறு யோகர் கண்களை மூடி தியானத்திலிருக்கும் போது இராஜகம்பீரத்துடன் புத்த பகவான் நிஷ்டையில் அமர்ந்திருப்பது போன்ற தோற்றமே எமக்குத் தென்படும்.

எவ்வாறு ஒருவர் மனச்சோர்விலிருந்து விடுபடலாம்? என்ற கேள்வியை யோகரிடம் கேட்கவேண்டுமென்ற எண்ணம் என்னிடம் தோன்றியது. ஆனால், எனது மனதில் தோன்றிய அக்கேள்வியை உணர்ந்தவராக விடையை உடனடியாகவே யோகர் கூறினார். "மனச்சோர்வு என்றால் என்ன? எல்லாம் நன்மைக்கே என்றுணராத நிலையிலிருப்பதாகும். எல்லாம் நன்மைக்கே என்று கொள்ளாத நிலையும், எல்லாம் நன்மைக்கே என்று எண்ணுகின்றமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகும். இன்ப, துன்பங்கள் வாழ்வில் வந்து போகும். அவற்றை நீ பார்க்கும் கோணத்தைப் பொறுத்தே உன் மனச்சோர்வும் உற்சாகமும் அமைந்திருக்கும்" என்றுரைத்தார் யோகர்.

யோகர் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் தருணத்திலேயே வயதான ஓர் அமெரிக்கப் பெண்மணி யோகரின் குடிலுக்குள் நுழைந்தார். அப்பெண் நடந்துகொண்ட விதத்தைப்பார்த்தபோது, அவர் யோகர்மீது பெரும் பக்தி கொண்டவர் என்பதை அறிய முடிந்தது. அப்போது யோகர் அப்பெண்ணை நோக்கி, "நீ என்ன பண்ணிப்போட்டாய்?" என்று பகிடியாகக் கேட்டார். "அயலில் உள்ள இந்து ஆலயத்துக்குச் சென்றிருந்தேன். அங்கே மிக நிம்மதியாக இருந்தது" என்று அப்பெண் பதிலளித்தாள்.

அப்போது அந்தப் பெண்ணிடம், "அக்கற்கோயிலையா சொல்கிறாய்?" என்று யோகர் சிரித்தபடி கேட்டார். பின்னர் அவர் சிரித்தவாறே, "கற்கோயிலுக்குள் கற்சுவாமிகளை நீ கும்பிட்டாயா?" என்றார். பின்னர், "ஒரே ஒரு கோயிலே உண்டு. அக்கோயில் நீயே. கடவுளை அறிவதற்கு உன்னையே நீ கோயிலாக அறியவேண்டும், வேறு கோயில்கள் இல்லை" என்றுரைத்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், "நானும் ஒரு மடையனே. நானும் அறிந்து கொள்ளவே முயற்சிக்கிறேன். இருட்டிலும் தேடுகிறேன். உண்மையில் நான் உங்களுக்கு உதவ முடியாது. நீங்கள் என்னிடமிருந்து எடுத்துப் போக எதுவுமில்லை. உங்களுக்கு எதனையும் என்னால் தரவும் முடியாது. நான் ஒரு மடையனே", என்று சுவாமி கூறினார்.


ஆனால் அந்த அமெரிக்கப்பெண்மணி பொறுமையிழந்தவராக, "நீங்கள் அப்டியல்ல" என்று கூறினார். அப்போது யோகர், "ஒரு வேளை நானொரு வித்தியாசமான மடையனாக இருக்கலாம். எனது மடைமையை எனது சம்மதத்தோடு ஏற்றுக்கொள்ளும் ஒரு மடையன்" என்றுரைத்தார்.

யோகர் பல ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வுலக வாழ்வை நீத்தார். காலவரம்பில்லாத ஆத்மீக தத்துவ ஞானத்தைப்பற்றி பல நூல்களை வாசித்தறிவதிலும் பார்க்க, அநுபூதிமான்களான மகான்களை நேரில் கண்டு அவர்கள் கூறுவதை செவிமடுப்பது மனத் தெளிவை உண்டுபண்ணுவதாகவே இருக்கும்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து செல்லும். உறவினர்கள், நண்பர்கள் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். உடன் பிறந்தவர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். உங்களின் முயற்சியை அதிகாரி பாராட்டுவார்.

**மிதுனம்**
புதிய பாதையில் ப்யணிக்கத் தொடங்குவீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார். பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். முயற்சி பலிதமாகும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். அதிகாரியின் நம்பிக்கையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் பல விஷயங்களை நீங்களே பார்க்கவேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைக்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**
பிள்ளைகள் நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருந்ததை வாங்கித் தருவீர்கள். மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். புது நட்பு மலரும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். அமோகமான நாள்.

**விருச்சிகம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
நண்பர்களின் ஆதரவு கிட்டும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வெளிவட்டாரத்தில்புது அனுபவம் உண்டாகும் ப வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். தைரியும் கூடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். சொந்த - பந்தங்கள் மதிக்கும்படி நடந்து கொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்**
இங்கிதமாகப் பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். முன்கோபத்தால் பகை உண்டாகும். கவனம் தேவைப்படும் நாள்.

# போர் யானைகள் நடுவே வாகை மலர் தமிழக வெற்றி கழக கொடி அறிமுகம்

சென்னை, ஒக. 23

தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சி பனையூரில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்ற கட்சியின் தலைவர், நடிகர் விஜய் கொடியை அறிமுகம் செய்தார்.

சிவப்பு, மஞ்சள் ஆகிய இரு நிறங்களுடன் இரண்டு போர் யானைகள், நடுவில் வாகை மலருடன் இருக்கும் வகையில் தமிழக வெற்றிக் கழகத்தின் கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் அந்தக் கட்சியின் நிர்வாகிகள்,



தொண்டர்கள், விஜய் இரசிகர்கள் திரளாக பங்கேற்றனர். விஜய்யின் தந்தை எஸ். ஏ. சந்திரசேகர், தாய் சோபா உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர். (எ)

# நடிகர் விஜய் அரசியலுக்கு வருவதால் இந்தியா கூட்டணிக்கு பாதிப்பு இல்லை

## காங்கிரஸின் செல்வப்பெருந்தகை

கள்ளக்குறிச்சி, ஒக. 23

தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய்க்கு காங்கிரஸ் சார்பில் வாழ்த்துகள். அவர் அரசியலுக்கு வருவதால் இந்தியா கூட்டணிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று தமிழ்நாடு மாநில காங்கிரஸின் தலைவர் கு. செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

கள்ளக்குறிச்சி அருகே சின்ன சேலத்தில் மாவட்ட காங்கிரஸ் சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை கலந்து கொண்டார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியவை, கட்சியை வலிமைப்படுத்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இனிவரும் காலங்களில் இந்த தேசத்தின் குரலாக ராகுல் காந்தியின் குரல் ஒலிக்கும்.

கருணாநிதி உருவம் பொறித்த நாணயம் வெளியிட்டதற்கு ராகுல் காந்தி வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார். பா. ஜ. க. - தி. மு. க. கள்ள உறவு வைத்திருப்பதாக சொல்லப்படுவது குறித்து காங்கிரஸூக்கு தெரியாது. நல்ல உறவுபற்றி பேசுவோம்- என்றார்.

முன்னதாக, செயல்வீரர்கள் கூட்டத்தில் உரையாற்றிய அவர், வெறுப்பு அரசியலை செய்து கொண்டிருக்கும் பாசிச, ஆர். எஸ். எஸ். கும்பலை விரட்ட வேண்டும். தேசத்தை காப்பதற்கு இந்தியா கூட்டணியின் தலைவர்கள் உறுதியாக இருக்கிறார்கள். பாசிச சக்திகளை விரட்ட வேண்டும் என்று தமிழக முதல்வர் உறுதியாக உள்ளார். இந்தியா கூட்டணியின் தமிழக தலைவராக இருக்கக்கூடிய முதல்வர் மு. க. ஸ்டாலின், இந்து மதத்தை எதிர்ப்பதிலும், இந்து மதத்தை அனுமதிக்கக்கூடாது என்பதிலும் உறுதியாக இருக்கிறார். மத நல்லிணக்கத்துக்கு உறுதுணையாக இருப்பவர்கள்தான் இந்தியா கூட்டணியின் தலைவர்கள் என்றார். (எ)

# தமிழக அரசியலில் வாகைசூட வாழ்த்துகள்

## விஜய்க்கு தெரிவித்தார் சீமான்




சென்னை, ஒக. 23

"தமிழக அரசியலில் வாகை சூட நெஞ்சம் நிறைந்த நல் வாழ்த்துகள", என்று தமிழக வெற்றிக் கழக கொடியை அறிமுகப்படுத்திய அதன் தலைவர், நடிகர் விஜய்க்கு நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வாழ்த்து தெரிவித்தார்.

இது தொடர்பில் சீமான் வெளியிட்டுள்ள எக்ஸ் வலைத்தள பதிவில்,

"தம்மை வளர்த்தெடுத்து, வாழ்வளித்த தாய்த் தமிழ்நாட்டு மக்களுக்குத் தன்னலமற்ற தொண்டாற்ற வேண்டும் என்ற புனித நோக்கத்தோடு, தமிழக வெற்றிக்கழகத்தின் கொடியை அறிமுகப்படுத்தி, நேரடி அரசியல் களத்தில் தடம் பதித்துள்ள அன்புத்தம்பி தளபதி விஜய், இலட்சிய உறுதி கொண்டு தமிழக அரசியலில் வாகைசூட நெஞ்சம் நிறைந்த நல் வாழ்த்துகள்", என்று தெரிவித்துள்ளார். (எ)

# திராவிட கட்சிகள் இல்லாத கூட்டாட்சியை 2026 இல் தமிழ்நாட்டில் உருவாக்குவோம்



## சொல்கிறார் பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை

காஞ்சிபுரம், ஒக. 23

2026ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலில் திராவிட கட்சிகள் இல்லாத கூட்டாட்சியை உருவாக்குவோம் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

காஞ்சிபுரத்தில் பா. ஜ. க. சார்பில் உறுப்பினர் சேர்க்கை முகாம் மற்றும் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் பங்கேற்க வந்த அண்ணாமலை காஞ்சிபுரம் சங்கர மடத்தின் மடாதிபதி விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளை சந்தித்து பேசினார். இதனைத் தொடர்ந்து கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்தக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அண்ணாமலை கூறியவை வருமாறு,

தமிழகத்தில் காமராஜர் ஆட்சிக்குப் பிறகு அனைத்து இடங்களிலும் ஊழல் எட்டிப் பார்க்கிறது. திராவிட கட்சிகள் இல்லாமல் பா. ஜ. க. ஆட்சிக்கு வரும்போதுதான் ஊழலை ஒழிக்க முடியும். அதற்கான முத்தாய்ப்பான கூட்டணியை 2024ஆம் ஆண்டு உருவாக்கினோம். 2026இல் திராவிடக் கட்சிகள் இல்லாத கூட்டணி ஆட்சியை தமிழகத்தில் உருவாக்குவோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் சகலருக்கும் சமமாக இருந்திருந்தால் ரணில் நீதிமன்றுக்கு செல்ல நேர்ந்திருக்கும்!

## அநுரகுமார திசாநாயக்க கருத்து



கொழும்பு, ஓக. 23

**சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட்டால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தின் முன் செல்ல நேர்ந்திருக்கும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.**

கம்போலையில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சியில் சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முதலீட்டின் ஊடான வருவாய் குறைந்த மட்டத்திலேயே எம்முடைய நாட்டுக்கு கிடைக்கப்பெறுகின்றது.

ஊழல் மோசடிகள் மிகுந்து காணப்படுகின்றமையினால் முதலீடுகளை மேற்கொள்ள முதலீட்டாளர்கள் அஞ்சுகின்றனர்.

ஆகவே ஊழல் மோசடிகளை யாருடைய ஆட்சியில் இல்லாதொழிக்க முடியும்.

சஜித் பிரேமதாஸவும் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதாக கூறுகின்றனார்.

கிரியெல்ல, சுஜீவ சேமசிங்க போன்றோரை அருகில் வைத்துக்கொண்டு எவ்வாறு அவர் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பார் என கேட்க விரும்புகின்றேன்.

அதேபோன்று எம்முடைய நாட்டில் சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

செல்வந்தர்களுக்கு ஒரு விதமாகவும், சாதாரண மக்களுக்கு ஒரு விதமாகவும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது நீதிமன்றத்தின் முன் நின்றிருப்பார்.

மகிந்தானந்த, பிரசன்ன ரணதுங்க போன்றோர் பாராளுமன்றத்துக்கு வருகை தரமுடியாத நிலையே ஏற்படும்.

ஆகவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சியில் சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படும் - என்றார். (அ)

# மின்சார கட்டணம் குறித்து விவாதத்திற்கு நான் தயார்!

## காஞ்சன விஜேசேகர கூறுகிறார்

கொழும்பு, ஓக. 23

மின்சாரம், மின்சார கட்டணம், கொள்முதல் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி முன்வைத்த கொள்கை தொடர்பான எந்தவொரு விவாதத்திற்கும் தான் தயாராக இருப்பதாக மின் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இயலும் ஸ்ரீலங்கா என்னும் தொனிப்பொருளில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சாரம், மின்சார கட்டணம், கொள்முதல் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி முன்வைத்த கொள்கை தொடர்பான எந்தவொரு விவாதத்திற்கும் நான் தயாராக இருக்கிறேன்

நாட்டின் எரிசக்தித் துறை நெருக்கடிக்கு தள்ளப்பட்டதால், மக்கள் விடுதலை முன்னணி மின் உற்பத்தி நிலையங்களை நிறுத்தி, அவற்றை அரசியல் பிரச்னைகளாக மாற்றியுள்ளது.

ஒரு தேசமாக நாம் முன்னேற முடியும் என்றால், நாம் செய்யும் எல்லாவற்றையும் எதிர்க்கும் கொள்கையை பின்பற்றவேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, நாட்டின் பொருளாதாரம் பாரிய வீழ்ச்சிக்குச் சென்றுள்ளது அதனை மீட்க முடியாது என கூறினார்.

ஆனால் இயலாது என கூறிய அனைத்து விடயங்களையும் இயலுமாக்கி காண்பித்துள்ள ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இவ்வாறு அவர் முன்னெடுத்து செல்லும் திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பதா இல்லையா என்றே நாம் பார்க்க வேண்டும் - என்றார். (அ)

# விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, ஓக. 23

வவுனியா விளக்கு வைத்த குளம் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந் துள்ளார்.

ஹைஏஸ் ரக வாகனமும், முச்சக்கர வண்டியும் மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த முச்சக்கர வண்டி மீது, அதே திசையில் பயணித்த ஹைஏஸ் மோதியதில் முச்சக்கர வண்டியின் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# 4 வெளிநாட்டு மலைப்பாம்புகளை மறைத்து வைத்திருந்த கும்பல் கைது!

கொழும்பு, ஓக. 23

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டு வந்து விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 வெளிநாட்டு மலைப்பாம்புகளை வத்தளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

செல்லப்பிராணிகளை விற்பனை செய்யும் குறித்த விற்பனை நிலையத்தின் உரிமையாளர் மற்றும் 2 ஊழியர்களும் இதன்போது கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது இலங்கையின் அரியவகை முதலை ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த மலைப்பாம்புகள் பயணப் பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டு விமானம் மூலம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த விலங்குகளை தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு அனுப்பி அவை பற்றிய அறிக்கையைப் பெறுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# பொருளாதார நெருக்கடிக்கு ரணிலினால் மட்டுமே தீர்வு!

## அநுப பெஸ்குவல் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

"உள்நாட்டு யுத்தத்தினை வெற்றிகொண்டு முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ அன்று தீர்வு வழங்கியது, போன்று பொருளாதார நெருக்கடிக்கு ரணில் விக்ரமசிங்கவினாலேயே தீர்வு காண முடிந்தது" என பாராளுமன்ற உறுப்பினர் அநுப பெஸ்குவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எதிர்த்தரப்பினர் தேர்தல் தோல்வியை கண்டு அஞ்சியுள்ளனர். எதிர்த்தரப்பினர் பலர் இன்று அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து இதுவரை 12 பேர் இணைந்துள்ளனர். கடந்த 2 வருடங்களாக இந்த நாட்டில் அரசியல் செய்யவில்லை. நாட்டு மக்கள் தொடர்பாகவே சிந்தித்து பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளையே ரணில் மேற்கொண்டார்.

நாடு பொருளாதார ரீதியில் மிகவும் ஒரு பின்தங்கிய நிலையில் காணப்பட்டது.மக்கள் வீதிக்கு இறங்கி போராடினர் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அரசியல் நெருக்கடியும் ஏற்பட்டது.

அதன் பின்னணியில் செயற்பட்டதுமக்கள் விடுதலை முன்னணியே. நாடு முதலீடுகளை இழந்தது. நாட்டிற்கு எந்தவருமானமும் இல்லாமல் இருந்தது. ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்று நாட்டில் கட்டம் கட்டமாக சுமூக நிலையை ஏற்படுத்தினார்.

நாட்டில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தினார். நாட்டில் இன்று நிம்மதி பெருமூச்சு விடக்கூடிய ஒரு நிலையையும் ஏற்படுத்தினார். நாட்டில் இன்று தேர்தல் ஒன்று இடம் பெறக்கூடிய வகையில் சூழ்நிலையையும் ஏற்படுத்தினார்.

நெருக்கடியின்போது நாட்டை பொறுப்பேற்க தவறியவர்கள் இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஜனாதிபதி இந்த நாட்டில் ஆட்சி செய்த 2 வருட காலப் பகுதியில அரச துறை தனியார் துறையினர் விவசாயத்துறை கல்வித்துறை சுகாதாரத்துறை என அனைத்திலும் காணப்பட்ட பிரச்னைகளை நிவர்த்தி செய்தார்.

தனியாக நாட்டை பொறுப்பேற்ற ஜனாதிபதி இன்று அதில் வெற்றி கண்டுள்ளார். உள்நாட்டு உள்நாட்டு யுத்தத்தினை வெற்றி கொண்டு யுத்தத்திற்கு அன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்வு வழங்கியது போன்று பொருளாதார நெருக்கடிக்கு ரணில் விக்ரமசிங்கவினால் தீர்வு காண முடிந்தது - என்றார். (அ)

# செப்ரெம்பர் 08 சிறப்பு நாள்!

கொழும்பு, ஓக. 23

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டு விநியோகம் எதிர்வரும் செப்ரெம்பர் 3ஆம் திகதி ஆரம்பமாகி 14ஆம் திகதி நிறைவடையும் என பிரதி தபால் மா அதிபர் ராஜித கேரணசிங்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, செப்ரெம்பர் 08 ஆம் திகதி வாக்குச் சீட்டு விநியோகத்துக்கான சிறப்பு நாளாகக் குறிப்பிடப்படும் என்று அவர் கூறினார்.

அன்றைய தினம் காலை 08 மணி முதல் மாலை 06 மணி வரை இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி தேர்தல்; 717 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அந்தவகையில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்பட்டமை தொடர்பாக 51 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஜூலை மாதம் 31ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரையிலும் மொத்தமாக 717 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. (அ)

# 7 புதிய முதலீட்டு வலயங்கள் நிறுவுவதற்கு அரசு தீர்மானம்!

கொழும்பு, ஓக. 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் புதிய முதலீட்டுத் திட்டத்தின் கீழ், ஏழு புதிய முதலீட்டு வலயங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

மாங்குளம், பரந்தன், காங்கேசன்துறை, திருகோணமலை, இரணவில, அம்பாந்தோட்டை மற்றும் பிங்கிரிய ஆகிய பிரதேசங்களை அண்மித்து முதலீட்டு வலயங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்த ஆண்டுக்குள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டு ஒப்பந்தங்கள் எதிர்பார்க்கப்பட்டதாகவும் ஆனால் கடந்த 6 மாதங்களில் முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி ஏற்கனவே 800 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான 27 திட்டங்கள் தற்போதும் செயற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் துறைமுக நகரத்தில் 118 காணிப் பிரிவுகளில் 46 பிரிவுகள் சீன முகவர் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் துறைமுக நகர வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க தற்போது 21 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மேலும் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடி பொலிஸ் முன்பாக ரவுடிகள் பெரும் அட்டகாசம்!

## எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரை வெட்டினர்

யாழ்ப்பாணம், ஓக. 23

**வடமராட்சி, நெல்லியடி நகரில் பொலிஸ் நிலையத்துக்கு முன்புறமாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரைக் கத்தியால் வெட்டி காயப்படுத்திய ரவுடிகளைக் கைது செய்ய நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.**

நேற்று முன் தினம் இரவு 11.15 மணியளவில் இந்த சம்பவம் நடந்தது.

நெல்லியடி நகரிலுள்ள கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியரே கத்தியால் வெட்டி காயப்படுத்தப்பட்டுள்ளார். நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்கு முன்புறமாக அந்த எரிபொருள் நிரப்பு நிலையம் அமைந்துள்ளது.

துன்னாலையை சேர்ந்த இரண்டு ரவுடிகள் நேற்று முன் தினம் இரவு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு வந்து தகராறில் ஈடுபட்டுள்ளனர். இதன்போது, ஊழியரை திடீரென கத்தியால் வெட்ட ஆரம்பித்தனர். இந்த சம்பவம் அங்குள்ள சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

தாக்குதலில் ஈடுபட்ட துன்னாலையை சேர்ந்த இருவரையும் அடையாளம் கண்டுள்ளதாக தெரிவித்த நெல்லியடி பொலிஸார், அவர்கள் விரைவில் கைதுசெய்யப்படுவார்கள் என தெரிவித்தனர்.

பொலிஸ் நிலையத்தின் முன்பாகவே ரவுடிகள் குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளமை பலரையும் அதிர்ச்சியடைய வைத்துள்ளது. (அ)

# நூறு பாடசாலைகளில் ஏ.ஐ. மாணவர் சங்கம்!

கொழும்பு, ஓக. 23

நூறு பாடசாலைகளில் "செயற்கை நுண்ணறிவு தொடர்பான மாணவர் சங்கங்களை" ஆரம்பிப்பதற்கான முன்னோடி திட்டத்தை தொடங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அரசாங்க தகவல் திணைக்களம், தரம் 6 முதல் 9 வரையிலான மாணவர்களின் பங்களிப்புடன் இம்முயற்சியை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் ஆண்டுகளில் இத்திட்டத்தை ஏனைய பாடசாலைகளுக்கு விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

முன்னோடித் திட்டத்தின் முடிவுகளின் அடிப்படையில் ஏனைய பாடசாலைகளில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

எதிர்கால உலகளாவிய போக்குகளை எதிர்கொள்ளக் கூடிய குடிமக்களை உருவாக்கும் நோக்கங்களை அடையவும், பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை திறம்பட பெறவும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான ஆய்வுகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்பை வழங்குவதே திட்டத்தின் குறிக்கோள் எனவும் அரசாங்க தகவல் திணைக்களம் கூறியுள்ளது. (அ)

# மனித அபிவிருத்தி சுட்டெண் 78 ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு, ஓக. 23

சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையின் பிரகாரம் இலங்கை 0.782 என்ற மனித அபிவிருத்திச் சுட்டெணுடன் 193 நாடுகளின் பட்டியலில் 78 ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இலங்கை உயர் - நடுத்தர வருமானம் பெறும் நாடு எனும் நிலையை அடைந்திருந்தபோதிலும், 2020 ஆம் ஆண்டு மீண்டும் குறைந்த - நடுத்தர வருமானம் பெறும் நாடு எனும் நிலைக்குக் கீழிறங்கியது. இருப்பினும் 2023 ஆம் ஆண்டுக்கான மனித அபிவிருத்திச் சுட்டெண் பிரகாரம் 193 நாடுகளில் இலங்கை 78 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இலங்கை உயர்வான மனித அபிவிருத்தியைக் கொண்டிருக்கிறது என்பதே இதன் அர்த்தமாகும்.

"உயர் பணவீக்கம், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி, உணவுப் பாதுகாப்பின்மை, எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு உள்ளடங்கலாக தீவிர பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கு இலங்கை முகம் கொடுத்தது. அவ்வேளையில் நடைமுறைப்படுத்தப்பட்ட சேதன உரக்கொள்கையின் தோல்வியை அடுத்து நெருக்கடி மேலும் தீவிரமடைந்ததுடன், உள்நாட்டு விவசாய உற்பத்தி கணிசமான அளவினால் வீழ்ச்சியடைந்தது" என சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

# மதுவரி திணைக்களம் ரூபா 7.9 பில்லியன் வரி நிலுவையை இன்னும் அறவிடவில்லை!

## சம்பிக்க ரணவக்க சபையில் தகவல்

கொழும்பு, ஓக. 23

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டு முதல் ஆறு மாத காலப்பகுதியில் மாத்திரம் 1680 பில்லியன் ரூபாவை திரட்டிக் கொண்டுள்ளன. மதுவரி திணைக்களம் பிரதான மதுபான நிறுவனங்களிடமிருந்து 7.9 பில்லியன் ரூபா வரியை இதுவரை அறவிடவில்லை என பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போது வழிவகைகள் பற்றிய பாராளுமன்ற குழுவின் அறிக்கையை சபைக்கு முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச வருவாயை ஈட்டிக் கொள்வதற்கு பல யோசனைகைள முன்வைத்துள்ளோம். உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகிய மூன்று அரச நிறுவனங்கள் கடந்த ஆறு மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் 1680.4 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளன.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வரி விலக்களித்ததால் 978 பில்லியன் ரூபா இழக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டது.வரி செலுத்தாதவர்களின் 900 வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 18 வயதுக்கு மேற்பட்ட 17 மில்லியன் பேருக்கு வரி செலுத்துவோர் அடையாள எண் (டின் இலக்கம்) வழங்க உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க பரிந்துரைத்தோம்.இதற்கமைய 5 மில்லியன் பேருக்கு டின் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது.

தங்கம் இறக்குமதியாளர்களிடமிருந்து வரி அறவிடல் குறித்து சிக்கல் காணப்படுகிறது. இதற்கான ஆலோசனைகளை குழுவின் ஊடாக வழங்கியிருந்தோம். இதற்கமைய பிரதான தங்க இறக்குமதியாளர்களில் 17 பேரில் 6 பேர் வரி செலுத்தியுள்ளனர்.அத்துடன் தண்டப்பணம் அறவிடல் ஊடாக சுங்கத் திணைக்களம் இந்த ஆண்டு மாத்திரம் 10 பில்லியன் ரூபாவை மேலதிகமாக திரட்டியுள்ளது.

மதுவரி திணைக்களம் அறவிட வேண்டிய 7.9 பில்லியன் ரூபா வரி இன்றும் நிலுவையில் உள்ளது. வரி செலுத்தாத பிரதான மதுபான உற்பத்தி நிறுவனங்களின் அனுமதிப் பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மதுவரி திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கினோம்.

அனுமதிப் பத்திரத்தை இடை நிறுத்துவது குறித்து நிதியமைச்சு உரிய ஆலோசனைகளை வழங்காத காரணத்தால் உரிய தீர்மானத்தை எடுக்க முடியவில்லை என்று மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது - என்றார். (அ)

# ஜனாதிபதி தேர்தலில் கறுப்புப் பணம் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது

## ரொஷான் ரணசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 23

ஜனாதிபதித் தேர்தலில் கறுப்புப் பணம், பாதாளக் குழுக்களின் பணம், போதைப் பொருள் பணம் மற்றும் சூதாட் டப் பணம் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது என்று ஜனாதிபதி வேட்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானது என்றாலும் நீதியானதா? என்ற கேள்விகள் எழுகின்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவே முதலில் அநீதியை இழைக்கின்றது. சில வேட்பாளர்களுக்காக அவர்களின் உதவியாளர்களை அழைத்துவர தனியான இடம் ஒதுக்கியுள்ளது.

39 வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்கையில் 4 வேட்பாளர்களுக்காக மட்டும் இடம் ஒதுக்குவது அவர்களுக்காக ஊக்குவிப்பாகவே அமைகின்றது.

இதனை செய்ய முடியுமா? இதேவேளை உள்ளூராட்சித் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்காக 20 ரூபாவே செலவிட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரால் 109 ரூபா செலவிட முடியுமென அறிவித்துள்ளது. அப்படியென்றால் 18,500 இலட்சம் ரூபா அவசியமாகும்.

இது நீதியான தேர்தலா? செலவு கட்டுப்பாடு தொடர்பான சட்டத்தின் எதிர்பார்ப்பு என்ன? கறுப்புப் பணம், போதைப் பொருள் பணம், பாதாள குழுக்களின் பணம், சூதாட்ட பணம் என்பன இந்தத் தேர்தலில் புழக்கத்தில் உள்ளது. இப்படி போனால் எதிர்காலத்தில் நாடு அழிவையே எதிர்நோக்கும் - என்றார். (அ)

# இன்னும் 5 வருடங்களுக்கு ரணிலிடம் நாட்டை ஒப்படைக்க மக்கள் முடிவு!

## கூறுகின்ரரார் நிமல் லான்சா

கொழும்பு, ஓக. 23

நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் இத்தேர்தலில் வெறுப்பு, தற்பெருமை அரசியலை நிராகரித்து உண்மையை மக்களுக்கு எடுத்து ரைத்து ரணில் விக்ரமசிங்கவுக்கு இன்னும் ஐந்து வருடங்களுக்கு அதிகாரத்தை வழங்க இந்நாட் டின் புத்திசாலித்தனமான மக்கள் தீர்மானித்துள் ளனர். இந்த நாட்டை கட்டியெழுப்பக் கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே என பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் தலைமை வகித்த அனைத்து விடயங் களையும் வென்றெடுத்துள்ளோம். மக்க [illegible] களை அரசியலில் முன் னோக்கிக் கொண்டு வரவேண்டும். மக்களுக்கு உதவாதவர்களைக் கொண்டு வருவதன் மூலம் மக்களும் நாடும் பின்னோக்கிச் செல்லும். கிராமத்தையும், நகரத்தையும், நாட்டையும் யாரால் கட்டியெழுப்ப முடியும், ரணிலைத் தவிர வேறு எவராலும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

கோட்டாபயவை அழைத்து வந்தபோதும் அவரை அழைத்து வர வேண்டாம் என்று கூறினோம். எனினும் அவர் தேர்தலில் களமிறக்கப் பட்டதால் அவருக்காக நாமும் வேலை செய் தோம். ஆனால் இறுதியாக அவர் மக்களால் துரத்தப்பட்டார். எனவே இந்த நாட்டை யாரால் கட்டியெழுப்ப முடியும் என்பதை மக்கள் தீர்மா னிக்க வேண்டும். சஜித் பிரேமதாஸவால் அதனை செய்ய முடியுமா? அவருடன் நெருங்கிப் பழகுப வர்களின் கதைகளைக் கேட்கும்போதும், அவர் எப்படி அமைச்சைக் கையாண்டார் என்பதைப் பார்க்கும்போதும், அவரால் நாட்டை நிர்வகிக்க முடியாது என்பது புரியும்.

வேலை செய்யாதவர்கள், தொழில் தொடங்கா தவர்கள், அனுபவம் இல்லாதவர்கள் ஒரு நாட் டைக் கட்டியெழுப்ப முடியாது. இந்நாட்டின் நிலைமைக்கு ஏற்ப சர்வதேச சமூகத்துடன் தொடர்பு வைத்திருக்கும் ரணில் விக்கிரமசிங் கவை தவிர வேறு யாராலும் இந்த நாட்டை காப் பாற்ற முடியாது. அதனால் தான் பாராளுமன்றத் தில் அதிக எண்ணிக்கையிலான எம்.பி.க்கள் அவருடன் இணைந்துள்ளனர். - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மக்களை ஏமாற்ற மாட்டேன் காணி, பொலிஸ் அதிகாரம் இல்லை!

## அநுராதபுர கூட்டத்தில் நாமல்

கொழும்பு, ஓக. 23

**தேர்தல் காலத்தில் வடக்கில் உள்ளவர்களை ஏமாற்ற வேண்டிய தேவை கிடையாது. தமிழர்களின் கலாசாரத்தை பாதுகாப்பேன். மொழி உரிமையும் வழங்குவேன். ஆனால், வட - கிழக்கு மாகாணத்தை இணைத்து காணி, பொலிஸ் அதிகாரத்தை ஒருபோதும் வழங்கமாட்டேன் - இவ்வாறு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

நாமல் ராஜபக்ஷவின் முதல் தேர்தல் பரப்புரை கூட்டம் அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன இந்த நாட்டின் அரசியல் வரைபடத்தை மாற்றியமைத்தது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேசிய உற்பத்திகளை முன்னிலைப்படுத்திய பொருளாதார திட்டங்களை முன்னெடுத்து குறுகிய காலத்தில் நாட்டை பல்வேறு துறைகளில் முன்னேற்றினார்.

2015 ஆம் ஆண்டு பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாட்டை கையளித்தோம். 2019ஆம் ஆண்டு பொருளாதார மட்டத்தில் பாதிக்கப்பட்டிருந்த நாட்டையே கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை பொறுப்பேற்றார். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் கோவிட் பெருந்தொற்று தாக்கத்துக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. பொருளாதாரமா அல்லது மக்களின் உயிரா என்ற தீர்மானமிக்க கேள்வி எழுந்த போது மக்களின் உயிரையே பாதுகாத்தோம்.

பொருளாதார பாதிப்பை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் எமது அரசாங்கத்தை வீழ்த்தினார்கள். அரசாங்கம் வீழ்ச்சியடைந்தாலும் நாட்டை வீழ்ச்சியடைய செய்யவில்லை. இவ்வாறான நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசாங்கத்தை கையளித்து நிலைமைகளை சீர்செய்வதற்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கினோம்.

இலங்கை ஒற்றையாட்சி நாடு. நாட்டின் ஒற்றையாட்சியை பாதுகாக்கவே இராணுவத்தினர் போரிட்டார்கள். நாங்கள் அரசியலில் இருக்கும் வரை இந்த நாட்டில் எல்லைக் கிராமங்கள் தோற்றம் பெற இடமளிக்க போவதில்லை. இந்த பௌத்த நாட்டில் அனைத்து மதங்களுக்கும் முன்னுரிமை மற்றும் கௌரமளிக்க தயார். அதனை செய்வோம் - என்றார்.

# இரத்த அழுத்தம், நீரிழிவை கட்டுப்படுத்த அதிக நிதி!

## சுகாதார அமைச்சர் பத்திரண தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 23

இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் கட்டுப்படுத்தல் செயல் திட்டத்துக்காக எதிர்வரும் வருடங்களில் அதிகளவு நிதியை ஒதுக்கத் தீர்மானித்துள்ளதாக சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

இதேவேளை, ஆரம்ப சுகாதார சேவைக்கு ஒதுக்கப்படும் நிதியை அடுத்த வருடத்தில் மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு மேலாக நோய்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படும்.


பாராளுமன்றத்தில் வாய்மூல விடை க்கான வினாக்கள் வேளையில் எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹிணி குமாரி கவிரத்ன எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நாடளாவிய ரீதியில் இரத்த அழுத்த நோய் மற்றும் நீரிழிவு நோயாளர்கள் பெரும்பாலாக காணப்படுகின்றனர். குறிப்பாக வயது முதிர்ந்தவர்களில் நூற்றுக்கு 45 வீதத்துக்கும் அதிகமானோர் இரத்த அழுத்த நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

அதனால், இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் கட்டுப்படுத்தல் செயல்திட்டத்திற்காக எதிர்வரும் வருடங்களில் அதிகளவு நிதியை ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இதேபோன்று வயது முதிர்ந்தவர்களில் நூற்றுக்கு 24 வீதமானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால் சிறுநீரக பாதிப்புகளும் அதிகரித்துள்ளன - என்றார். (ஐ)

# இ.போ.ச பஸ் விபத்து



கொழும்பு, ஓக. 23

பதுளை - ஸ்பிரிங்வெளி வீதியில் வீரியபுர பிரதேசத்தில் பதுளை இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றின் பின் சக்கரம் ஒன்று உடைந்து விபத்துக்குள்ளானதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளான பஸ், பெத்தேகமவில் இருந்து ஸ்பிரிங்வெளி ஊடாக பதுளை நோக்கிச் சென்றபோது இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் சுமார் 80 பேர் வரை பயணித்தனர். எனினும், எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ரணிலுடன் இ.தொ.கா 28ஆம் திகதி ஒப்பந்தம்!

கொழும்பு, ஓக. 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் எதிர்வரும் 28 ஆம் திகதி இ.தொ.கா புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில், மலையக மக்கள் மாத்திரம் இன்றி இலங்கை வாழ் தமிழர்களின் நலன்புரித் திட்டங்கள் உள்வாங்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கும் முடிவை காங்கிரஸ் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற தேசிய சபை கூட்டத்தின் பிறகு அதிகாரபூர்வமாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கடற்றொழிலாளருக்கு இன்று முதல் டீசல், மண்ணெண்ணெய் மானியம்

கொழும்பு, ஓக. 23

இன்று முதல் அமுலாகும் வகையில் கடற்றொழிலாளர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் லீற்றருக்கு 25 ரூபாய் மானியம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதேவேளை தேயிலை துறையினருக்கு 4 ஆயிரம் ரூபாய் உர மானியம் வழங்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த சலுகைகள் இன்று முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# காப்பகத்திலிருந்து 4 சிறுவர் மாயம்

கொழும்பு, ஓக. 23

வெள்ளவாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சிறுவர் காப்பகம் ஒன்றிலிருந்த நான்கு சிறுவர்கள் காணாமல் போயுள்ளனரென வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

16,14 மற்றும் 15 வயதுடைய நான்கு சிறுவர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இந்த நான்கு சிறுவர்களும் யாரிடமும் சொல்லாமல் சிறுவர் காப்பகத்திலிருந்து வெளியே சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# வவுனியா வைத்தியசாலையில் மரணித்த சிசுவின் உறவினர்கள் கூடி ஆர்ப்பாட்டம்!

## பெற்றோருக்கு நீதி வழங்குமாறு கோரிக்கை



வவுனியா, ஓக. 23

வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மரணித்த சிசுவின் பெற்றோருக்கு நீதி வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டமானது வவுனியா வைத்தியசாலையின் பிரதான வாயிலின் முன்பாக நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்த போது-

குழந்தையின் தாய் வலி தாங்க முடியாமல் பல மணி நேரங்கள் கதறியபோதும் அவருக்கு சிசேரியன் செய்யவில்லை. இவ்வாறனவர்களை நம்பி இந்த வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எப்படி செல்ல முடியும்.

குறித்த சம்பவம் தொடர்பாக வைத்தியசாலையினால் முன்னெடுக்கப்படும் உள்ளக விசாரணையில் எமக்கு துளியும் நம்பிக்கை இல்லை. எனவே சுகாதார அமைச்சினுடாக ஒரு குழு நியமிக்கப்பட்டு இதற்கான நீதியான விசாரணையை மேற்கொள்ளவேண்டும். அதுபோலவே சிசுவின் சட்ட வைத்திய பரிசோதனையையும் கொழும்பு வைத்தியர்கள் மூலம் முன்னெடுக்கவேண்டும்.

அத்துடன் பொறுப்பே இல்லாத இந்த வைத்தியசாலைக்கு மூன்று பணிப்பாளர்கள், இரண்டு நிர்வாக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது ஏன் என்று எமக்கு தெரியவில்லை.

எனவே இந்த சம்பவத்துக்கு நீதி கிடைக்கும் வரை பொது மக்கள் இங்கு மகப்பேற்றுக்காக வரவேண்டாம் என நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை சிசுவின் சடலத்தை வவுனியா வைத்தியசாலை பிரேத அறையில் நீதிபதி பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எஸ். பி. நாவின்ன ரணிலுக்கு ஆதரவு



கொழும்பு, ஓக. 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே இந்த நாட்டின் எதிர்காலத்தை கையகப்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமானவர் என தெரிவித்த முன்னாள் அமைச்சர நாவின்ன ரணிலுக்கு ஆதரவளிக்கவுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்காக ஆற்றிய பணிகளை அனைத்து பிரஜைகளும் மறந்துவிடக் கூடாது எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# சிறுவர்களுக்கு காய்ச்சல் அதிகரிக்கும் நிலைமை!

கொழும்பு, ஓக. 23

தற்போது நிலவும் குளிர் கால நிலையுடன் சிறுவர்களுக்கு காய்ச்சல் அதிகரிக்கும் நிலை காணப்படுவதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த சில நாட்களாக 'இன்புளுவன்சா' நோயாளர்களின் அதிகரிப்பும் பதிவாகியுள்ளது. குறிப்பாக இருமல், சுவாசிப்பதில் சிரமம் போன்றவை இருந்தால் வைரஸ் காய்ச்சல் ஏற்படும் அபாயம் உள்ளது.

மேலும், இருமல், சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தால் சிறுவர்களை வீட்டை விட்டு வெளியே அனுப்ப வேண்டாம். அந்த அறிகுறிகள் இருந்தால் முகக்கவசம் அணிவது பொருத்தமானது.

மேலும், குழந்தைகளுக்கு இரவில் இருமல் வந்தால், நிமோனியா ஏற்படும் அபாயம் உள்ளதால், உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறவேண்டும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இடையே கைகலப்பு!

## பாலமுனை அமைப்பாளர் இடைநிறுத்தம்

கல்முனை, ஓகஸ். 23

**சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற கைகலப்பு சம்பவத்துடன் தொடர்புடையவராக கருதப்படும் கட்சியின் பாலமுனை பிரதேச அமைப்பாளர் ஏ. எல். எம். அலியார், கட்சியின் மாவட்ட செயற்குழு மற்றும் உயர்பீட உறுப்பினர் பதவிகளில் இருந்து இரு வார காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று அந்தக் கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பர் அறிவித்துள்ளார்.**

அம்பாறை மாவட்ட செயற்குழுக் கூட்டம் கடந்த 11 ஆம் திகதி அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு சக்கி மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டம் நிறைவுற்று தலைவர் மண்டபத்தில் இருந்து வெளியேறிய பின்னர் கட்சியின் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறி குழப்பகரமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரிப்பதற்காக கட்சியின் தவிசாளர் ஏ. எல். அப்துல் மஜீத், பிரதித் தலைவர் சட்டத்தரணி எஸ். எம். ஏ. கபூர் மற்றும் பிரதிச் செயலாளர் மன்சூர் ஏ காதர் ஆகியோர் அடங்கிய குழுவொன்றை கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் உடனடியாக நியமித்திருந்தார்.

கட்சியின் தவிசாளர் ஏ. எல். அப்துல் மஜீத், பிரதித் தலைவர் சட்டத்தரணி எஸ். எம். ஏ. கபூர் ஆகிய இருவரும் கூட்டம் நிறைவடைந்ததை தொடர்ந்து நெரிசல் காரணமாக ஏனையோர் மண்டபத்தில் இருந்து வெளியேறும் வரை காத்திருந்த வேளையில் அப்போது மண்டபத்துக்குள் நடந்த விடயங்களை நேரடியாக அவதானித்திருந்தனர். அதற்கு மேலதிகமாக சம்பவத்தின் பின்னணி குறித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதனடிப்படையில் தலைமையிடம் இந்தக் குழு முன்வைத்த பரிந்துரைக்கு அமைவாக தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் கட்சியின் பாலமுனை பிரதேச அமைப்பாளர் ஏ. எல். எம். அலியார், இரண்டு வார காலத்துக்கு கட்சியின் மாவட்ட செயற்குழு மற்றும் உயர்பீட உறுப்பினர் பதவிகளில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதாக காரியப்பர் நேற்று வியாழக்கிழமை அறிவித்துள்ளார். (எ)



# வவுணதீவில் காட்டு யானையால் நெல் களஞ்சியசாலை உடைப்பு

வவுணதீவு, ஓக. 23

மட்டக்களப்பு, வவுணதீவில் காட்டு யானையால் நெல் களஞ்சியசாலை உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளது.

சிறுபோக வேளாண்மை அறுவடை முடிந்த கையோடு அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வாரத்துக்குள் மட்டும் பல உயிர்கள் காட்டு யானைகளால் காவு கொள்ளப்பட்டதுடன், குடியிருப்புகள், பயன்தரும் மரங்கள் மற்றும் உடைமைகளுக்கும் பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாகவே மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரவெட்டி கிராமத்துக்குள் செவ்வாய்க்கிழமை இரவு புகுந்த காட்டு யானை, தனியாருக்கு சொந்தமான நெல் களஞ்சியசாலையின் சுவரை உடைத்து அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நெல் மூடைகளையும் சேதப்படுத்தியுள்ளது.


இதேவேளை, இந்த காட்டு யானை அந்தப் பிரதேசத்தில் இருந்த பயன்தரும் தென்னை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் குறித்த காட்டு யானையை வேறு இடத்துக்கு துரத்தியதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.(எ)

# பெண் சுயதொழில் முயற்சியாண்மை திட்டம் நற்பிட்டிமுனையில் ஆரம்பம்

கல்முனை, ஓக. 23

ஏ. ஆர். மன்சூர் பௌண்டேசனின் பெண் மேம்பாட்டு திட்டத்தின் ஓர் அங்கமாக பெண் சுய தொழில் முயற்சியாண்மை திட்டமானது நற்பிட்டிமுனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏ. ஆர். மன்சூர் பௌண்டேசனால் "பொருளாதார ரீதியாக வலுப்படுத்தப்பட்ட பெண் சமூகத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளில் கல்முனை, சாய்ந்தமருது, நாவிதன்வெளி, காரைதீவு மற்றும் நிந்தவூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் பெண் மேம்பாட்டு திட்டம் ஏ. ஆர். மன்சூர் பௌண்டேசயின் தலைவி, சட்டத்தரணி மரியம் மன்சூர் நளிமுதீன் தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ளது.



இதன் ஓர் அங்கமான பெண் சுயதொழில் முயற்சியாண்மை எனும் பெண்கள் நலன் சார் உதவித்திட்டத்தின் ஆரம்ப கட்ட நிகழ்வானது நற்பட்டிமுனை பிரதேசத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பெண்களின் வளர்ச்சிக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து, பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி, அதற்கான வளங்களை அமைத்துக் கொடுத்து, பெண்களின் நலன்புரி, சுகாதாரம், தொழில்நுட்பம் மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதே இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இதன்போது, பெண்களுடன் நேரடியாக கலந்துரையாடி அவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அதற்கான தீர்வுகளை வழங்குவதற்காக பெண் சுயதொழில் முயற்சியாண்மை செயல் திட்டத்தின் விண்ணப்பப் படிவங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (எ)

# விமானப்படையின் கல்வி பீடத்தால் சீனக்குடாவில் கண்காட்சி, சாகசம்

திருகோணமலை, ஓக. 23

திருகோணமலை சீனக்குடா விமானப்படை கல்வி பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட எரோ பேஸ் - 2024 கண்காட்சி நிகழ்வுகள் 22ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை சீனக்குடா விமானப்படை வளாகத்தில் நடைபெறவுள்ளன.

எரோ பேஸ் - 2024 கல்வி தொழில்நுட்ப மற்றும் வர்த்தக கண்காட்சியில் இலங்கை அரச பல்கலைக்கழகங்கள், தனியார் பல்கலைக்கழகங்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் வியாபார மற்றும் தொழில்நுட்ப கூடாரங்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் இலங்கை விமானப் படையின் விமான சாகசங்கள், பராசூட் சாகசங்கள், விமானப் படை மோப்ப நாய்களின் சாகச நிகழ்வுகள், விமானப்படை மீட்புக் குழுவினரின் விசேட மீட்பு நடவடிக்கை தொடர்பான காட்சிகள் மற்றும் அங்கம்புர மற்றும் தற்காப்பு கலை காட்சிகள், அணிவகுப்பு குழுவினரின் விசேட காட்சிகள், இரவு நேர இசை நிகழ்ச்சிகள் என்பன நடத்தப்படவுள்ளன.

இதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஒரு புதிய அனுபவத்தை பெற முடியும். இந்த நிகழ்வுகள் தினந்தோறும் பி.ப. 3 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.(எ)

# விசேட தேவையுடையோருக்கு கொடுப்பனவு வழங்கி வைப்பு

காரைதீவு, ஓக. 23

அம்பாறை, காரைதீவு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விசேட தேவையுடையவர்களுக்கான கொடுப்பனவுகள் காரைதீவு பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், கணக்காளர் மற்றும் செயலக சமூக சேவைப் பிரிவு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ)


# மருத்துவ மாது மாணவிகள் கல்முனையில் களப்பணி!


கல்முனை, ஓக. 23

சமூக அமைப்பில் பொதுச் சுகாதார மருத்துவ மாது வழங்கும் சேவைகளைப் புரிந்து கொள்ளவும், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சுகாதார கட்டமைப்பை அறிந்து கொள்ளவும் பொதுச் சுகாதார மருத்துவ மாது மாணவிகள் களப்பணியில் ஈடுபடவுள்ளனர்.

அந்தவகையில் களப்பணியில் பரீட்சியப்படுத்தும் பொருட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு இணைப்புச் செய்யப்பட்ட 17 பொதுச் சுகாதார மருத்துவ மாது மாணவிகளையும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கு நியமித்து கடிதம் வழங்கும் நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம். ஏ. நிஸ்பின், பிராந்திய மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாது உள்ளிட்ட பலர் ஆகியோர் கலந்துகொண்டனர்.





கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு இணைப்புச் செய்யப்பட்ட குறித்த பொதுச் சுகாதார மருத்துவ மாது மாணவிகள் இரண்டு வாரங்கள் களப்பணியில் ஈடுபடவுள்ளனர். (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல நாடுகளின் நலன் சார்ந்து இன்றைய இந்தியா சிந்திக்கிறது

## போலந்தில் பிரதமர் மோடி

வார்சா, ஓக. 23

அனைத்து நாடுகளின் நலன் சார்ந்து இந்தியா சிந்திக்கிறது. அதனால், உலகம் இந்தியாவை மதிக்கிறது என்று போலந்தில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.




அரசுமுறை பயணமாக போலந்து சென்றுள்ள இந்தியப் பிரதமர் மோடிக்கு தலைநகர் வார்சாவில் சிவப்பு கம்பள வரவேற்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து போலந்து வாழ் இந்தியர்கள் மத்தியில் மோடி உரையாற்றினார். அப்போது,

பல ஆண்டுகளாக இந்தியாவின் வெளிவிவகார கொள்கை அனைத்து நாடுகளிடமிருந்தும் ஒருவித தூரத்தை கடைப்பிடிப்பதாக இருந்தது. ஆனால், இப்போது நிலைமை மாறி விட்டது. இப்போது இந்தியாவின் கொள்கை அனைத்து நாடுகளுடனும் நெருக்கமான உறவைப் பேணுவதாக உள்ளது. இந்தியா எல்லோரிடமும் தொடர்பு கொள்ள விரும்புகிறது. இன்றைய இந்தியா அனைத்து நாடுகளின் நலன் சார்ந்து சிந்திக்கிறது. அதனால், உலகம் இந்தியாவை மதிக்கிறது. இந்தியாவை அனைவரின் நண்பர் என்று அறிகிறது- என்றார். (எ)

# இந்திய மருந்து நிறுவனத்தில் அணு உலை வெடித்து விபத்து

## 15 பேர் உடல் கருகி உயிரிழப்பு

புதுடில்லி, ஓக. 23

**இந்தியாவின் ஆந்திர மாநிலம் அச்சுதாபுரம் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள மருந்து நிறுவனத்தில் அணு உலை வெடித்து 15 பேர் கருகிப் பலியான சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**



நேற்று மதிய உணவு நேரத்தின்போது இந்த வெடிப்பு சம்பவம் நடந்துள்ளது. அணு உலை வெடித்ததால் அந்தப் பகுதியில் கரும்புகை ஏற்பட்டது. வெடி விபத்து குறித்து தகவல் அறிந்த பொலிஸார் மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அம்புலன்ஸ்கள் மருத்து நிறுவன வளாகத்துக்குள் வேகமாக நுழைந்தன. இந்த விபத்தில், முதற்கட்ட தகவலில் 15 பேர் உயிரிழந்ததாகவும் 20 பேர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.


தீ விபத்துக்கு பிறகு ஆலையின் சுவரும் இடிந்து விழுந்துள்ளது. மீட்புப்பணி தொடர்வதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

## மொஸ்கோ மீது தாக்குதல்

# உக்ரைன் அனுப்பிய 11 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியது ரஷ்ய இராணுவம்!

மொஸ்கோ, ஓக. 23

தலைநகர் மொஸ்கோ மீது தாக்குதல் நடத்த உக்ரைன் இராணுவத்தினர் அனுப்பிய 11 ட்ரோன் கள் உட்பட 45 ட்ரோன்களை ரஷ்ய இராணுவத் தினர் சுட்டு வீழ்த்தினர்.



2022ஆம் ஆண்டு பெப்ரவரி முதல் ரஷ்யா - உக்ரைன் இடையே தொடர்ந்து தாக்குதல் நடை பெற்று வருகிறது. இந்த நிலையில், மொஸ்கோ மீது தாக்குதல் நடத்த 11 ட்ரோன்களை உக்ரைன் இராணுவம் அனுப்பியது. இவற்றை ரஷ்ய இராணுவத்தினர் சுட்டு வீழ்த்தினர்.

உக்ரைன் - ரஷ்யா இடையே போர் தொடங்கியதில் இருந்து தலைநகர் மொஸ்கோவை குறிவைத்து நடத்தப்பட்ட முதல் தாக்குதல் இது என்றும், அதை முறியடித்தோம் என்றும் ரஷ்ய இராணுவத்தினர் தெரிவித்தனர். இரு நாடுகளுக்கு இடையிலான போர் பெரும்பாலும் ஏவுகணைத் தாக்குதல் மற்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் என்ற அளவிலேயே நடைபெற்று வருகிறது. இதில் இரு தரப்பிலும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், விமானத் தளங்கள் உட்பட முக்கிய இடங்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சக அதிகாரிகள் கூறும்போது, மொஸ்கோவில் 11 ட்ரோன்கள் உட்பட மொத் 45 உக்ரைன் ட்ரோன்களை சுட்டு வீழ்த்தி இருக்கிறோம். பிரையான்ஸ்க் பகுதியில் 23, பெல்கோராட் பகுதியில் 6, கலுகா பகுதியில் 3, குர்க்ஸ் பகுதியில் 2 ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன - என்றனர்.

மொஸ்கோவில் உக்ரைன் ட்ரோன்கள் நுழைந்ததால், உடனடியாக முக்கிய விமான நிலையங்களின் சேவைகள் நிறுத்தப்பட்டன. சில மணி நேரத்துக்குப் பிறகு விமான சேவைகள் தொடங்கப்பட்டன என்று ரஷ்ய விமான சேவைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

# ஷேக் ஹசீனா மீது 33 வழக்குகள் பதிவு



டாக்கா,

ஷேக் ஹசீனா மீது கொலை வழங்குகள் உட்பட பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது.

பங்களாதேஷத்தில் ஷேக் ஹசீனா தலைமையில் அவாமி லீக் கட்சியின் ஆட்சி நடந்து வந்தது. இந்த நிலையில், அரசு வேலைகளில் இடஒதுக்கீடு விவகாரம் வன்முறையாக வெடித்தது. இதற்கு எதிராக கடந்த ஜூலையில் தொடங்கிய மக்கள் போராட்டம் பல வாரங்களாக தொடர்ந்து நீடித்தது.

இந்தச் சூழலில், பிரதமர் பதவியை இராஜினாமா செய்த ஷேக் ஹசீனா, நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார். இதனால் ஆட்சியை கைப்பற்றிய இராணுவம், நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசை அமைத்தது. எனினும், அங்கு வன்முறையும், கலவரமும் தொடர்ந்த நிலையில், பலி எண்ணிக்கை 600ஐ கடந்துள்ளது.

இந்த போராட்டம் தொடர்பில் ஷேக் ஹசீனா மீது ஏற்கனவே கொலை, கடத்தல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில், கடந்த 4ஆம் திகதி சில்ஹெட் சிட்டி பகுதியில், ஆர்ப்பாட்டத்தின் போது நடந்த துப்பாக்கிச் சூடு மற்றும் வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஷேக் ஹசீனா, அவரது சகோதரி ஷேக் ரெகானா உட்பட 86 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஷேக் ஹசீனா மீது பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது.(எ)

# 151 எம். பி., எம். எல். ஏக்கள் மீது பெண்களுக்கு எதிரான வழக்கு

## இந்தியாவில் அதிர்ச்சி அறிக்கை

புதுடில்லி, ஓக. 23

இந்தியாவில் தற்போது பதவியில் இருக்கும் எம். பி. மற்றும் எம். எல். ஏக்களாக இருக்கும் 151 பேர் தங்கள் மீது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகள் இருப்பதாக தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் தெரிவித்திருப்பதாக ஏ. டி. ஆர். ரிப்போர்ட் தெரிவித்துள்ளது. இதில், மேற்கு வங்கம் முதலிடத்தில் உள்ளது.

இந்த அறிக்கைக்காக ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான அமைப்பு (ஏ.டி.ஆர்) கடந்த 2019 முதல் 2024 வரையிலான தேர்தல்களின்போது, தற்போது பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களாக உள்ளவர்கள் தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பித்த 4, 809 பிரமாணப் பத்திரங்களில் 4, 693 பிரமாணப் பத்திரங்களை ஆய்வு செய்தது. அதில், 16 எம். பிகள், 135 எம். எல். ஏக்கள் ஆகியோர் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளை சந்தித்து வருவது தெரிய வந்தது.

இந்தப் பட்டியலில் மேற்கு வங்க மாநிலத்தில் தற்போது பதவியில் இருக்கும் 25 எம். பிக்கள் மற்றும் எம். எல். ஏக்கள் மீது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகள் உள்ளன. அதனைத் தொடர்ந்து ஆந்திரப் பிரதேசத்தில் 21 பேர், ஒடிசாவில் 17 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த அறிக்கையின்படி, தற்போது பதவியில் உள்ள எம். பி. மற்றும் எம். எல். ஏக்களில் 16 பேர், பாலியல் வன்கொடுமை தொடர்பான வழக்குகள் தங்கள் மீது இருப்பதாக தெரிவித்துள்ளனர். இந்தக் குற்றங்களுக்கு குறைந்தது 10 ஆண்டுகள் அல்லது ஆயுள் தண்டனை வரை வழங்கப்படலாம். இந்த 16 பேரில் இருவர் எம்.பிகள், 14 பேர் எம். எல். ஏக்கள்.

கட்சிகளைப் பொறுத்தவரை, பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்குகளை எதிர்கொள்ளும் எம். பி., எம். எல். ஏக்களில் 54 உறுப்பினர்ளைக் கொண்டு மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி முதலிடத்தில் உள்ளது. காங்கிரஸ் கட்சி 23 உறுப்பினர்களுடன் இரண்டாவது இடத்திலும், தெலுங்கு தேசம் கட்சி 17 உறுப்பினர்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. பாஜக மற்றும் காங்கிரஸ் கட்சிகளில் தலா 5 உறுப்பினர்கள் மீது பாலியல் வன்கொடுமை வழக்குகள் உள்ளன என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தாடி வளர்க்காத 281 படையினரை அதிரடியாக நீக்கிய தலிபான் அரசு

காபூல், ஓக. 23

தாடி வளர்க்காத 281 படையினரை தலிபான் அரசு அதிரடியாக நீக்கியுள்ளது.

இதேவேளை, ஒழுக்கநெறி தவறிய திரைப்பட இறுவெட்டுகளை விற்பனை செய்த ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானில், 2021 ஆம் ஆண்டு முதல் தலிபான்கள் ஆட்சி நடந்து வருகிறது. இங்கு, பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், தலிபான் ஆட்சிக்காலத்தில் கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி, அங்குள்ள அறநெறி



அமைச்சகத்தின் திட்டமிடல் மற்றும் சட்டமாக்கல் பிரிவு இயக்குநர் மோஹிபுல்லா மோஹாலிஸ் கூறுகையில்,

இஸ்லாமிய சட்டத்துக்கு எதிராக செயல்பட்ட 13, 000இற்கும் மேற்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு, இஸ்லாமிய சட்டத்துக்கு உட்பட்டு தாடி வளர்க்காத 281 பேர் பாதுகாப்புப் படையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்- என்றார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிப் பிரச்னைக்கு தீர்வின்றேல் இன மோதல் தீவிரமடையும் ஆபத்து!

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

கொழும்பு, ஒக. 23

**போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னரான இலங்கையில் மோதலுக்குத் தூண்டுதலளிக்கும் மிகமுக்கிய காரணியாகக் காணிப் பிரச்னை காணப்படுகிறது. இதற்கு உடனடியாக தீர்வு காணத்தவறும் பட்சத்தில் இனங்களுக்கு இடையிலான மோதல்கள் தீவிரமடையும் - இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் எச்சரித்துள்ளது.**

வட, கிழக்கு மாகாணங்களில் அதிகரித்துவரும் நில அபகரிப்புகள் மற்றும் அவை அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்கள் பற்றி விரிவான விளக்கத்தையும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னெடுக்கப்படவேண்டிய பரிந்துரைகளையும் உள்ளடக்கி மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தால் "இலங்கையில் காணிப் பிரச்னையின் குறுக்கு வெட்டு (ஒன்றுக்கொன்று தொடர்புடைய) போக்கு" எனும் தலைப்பில் 95 பக்க அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

"இலங்கையில் யுத்தம் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டு 15 வருடங்களின் பின்னரும் இனங்களுக்கு இடையிலான பிளவுகள் தொடர்வதுடன், யுத்தத்துக்கான அடிப்படைக் காரணிகள் இன்னமும் களையப்படவில்லை. அதன் ஓரங்கமாக பல தசாப்தகால காணிப்பிரச்னை யுத்தத்தின் பின்னரும் தொடரும் அதேவேளை, இவ்விடயத்தில் பல்வேறு வழிமுறைகளில் நிகழும் அரச தலையீடுகள் நல்லிணக்க செயன்முறையில் பின்னடைவை ஏற்படுத்தக்கூடியவாறான பிளவுகளை தோற்றுவித்துள்ளன.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வட, கிழக்கு மாகாணங்களில் அதிகாரங்களின் சமத்துவமற்ற நிலையைத் தோற்றுவிப்பதற்கு காணிகள் பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதுடன், தற்போது இப்பகுதிகளில் மேலோங்கிவரும் "ஊடுருவல் போக்கு" அப்பகுதி மக்களிடையே அச்சத்தை விதைத்திருக்கிறது" என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## மனித அபிவிருத்தி சுட்டியில் இலங்கைக்கு 78ஆவது இடம்

கொழும்பு, ஒக. 23

சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்களின் சம்மேளனத்தால் வெளியிடப்பட்டுள்ள வருடாந்த அறிக்கையின் பிரகாரம் இலங்கையானது 0.782 என்ற மனித அபிவிருத்தி சுட்டியில் இலங்கை 78ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு இலங்கை உயர் - நடுத்தர வருமானம் பெறும் நாடு எனும் நிலையை அடைந்திருந்தது. எனினும், 2020ஆம் ஆண்டு மீண்டும் குறைந்த - நடுத்தர வருமானம் பெறும் நாடு எனும் நிலைக்குக் கீழிறங்கியது. இருப்பினும் 2023ஆம் ஆண்டுக்கான மனித அபிவிருத்தி சுட்டெண் பிரகாரம் 193 நாடுகளில் இலங்கை 78ஆவது இடத்தைப் பிடித்திருக்கிறது. (ஐ)

## ரூ. 25,000 ஊதிய உயர்வு தேர்தல் வாக்குறுதி அல்ல!

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்

கொழும்பு, ஒக.

அரச ஊழியர்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் வாழ்க்கை செலவு கொடுப்பனவு வழங்கும் முடிவு தேர்தலுக்கான வாக்குறுதியோ வெறும் ஜனரஞ்சக வார்த்தையோ அல்ல - என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று அவர் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், எதிர்காலத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானம் தொடர்பில் பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். அது தேர்தல் வாக்குறுதியா என்றும் அவர்கள் கேள்வியெழுப்பி வருகின்றனர்.

2024ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாட்டிலுள்ள 13 இலட்சத்து 80 ஆயிரம் அரசாங்க ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கினோம்.

ஓய்வூதியம் பெறுவோரின் கொடுப்பனவுகளையும் அதிகரித்தோம். அவர்களுக்கு மேலும் 3 ஆயிரம் ரூபாய் அதிகரிக்கப்பட்டது. இவை அனைத்தும் அரசாங்கத்தின் திட்டங்கள். நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை செய்தார்- என்றார்.

## 35 நாட்டவருக்கு இலவச வீசா

கொழும்பு, ஒக. 23

35 நாடுகளின் மக்கள் இலவச வீசா வசதியின் கீழ் நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் ஆறு மாதங்களுக்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, நெதர்லாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, செக் குடியரசு, இத்தாலி, சுவிற்சர்லாந்து, பெல்ஜியம், ஸ்பெயின், அவுஸ்திரேலியா, டென்மார்க், போலந்து, கசகஸ்தான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், நேபாளம், சீனா, இந்தியா, இந்தோனேஷியா, ரஷ்யா, தாய்லாந்து, மலேசியா, ஜப்பான், ஆஸ்திரியா, இஸ்ரேல், பெலாரஸ், ஈரான், சுவீடன், தென் கொரியா, கட்டார், ஓமன், பஹ்ரைன், நியூசிலாந்து நாட்டவர்கள் இலவச வீசா வாய்ப்பை பெற முடியும். (ஐ)



கம்பஹாவில் பெய்த கடும் மழையால் வீதிகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதேநேரம், கடும்மழையால் 2,354 பேருக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## யுக்திய: 626 பேர் கைது!

கொழும்பு, ஒக. 23

யுக்திய நடவடிக்கையில் நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் 626 பேர் கைது செய்யப்பட்டனர். கைதான அனைவரும் போதைப்பொருள் சார் குற்றங்களுடன் தொடர்புடையோரென பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களில் 618 ஆண்களும் 8 பெண்களும் அடங்குவர். 14 பேர் தடுப்பில் உள்ளனர். 5 பேர் புனர்வாழ்வுக்கு அனுப்பப்பட்டனர். (ஐ)

## தனிநபர் வருமானம் 20,000 டொலராக உயரும்

### அமைச்சர் பந்துல குணவர்த்தன

கொழும்பு, ஒக. 23

2048ஆம் ஆண்டுக்குள் வறுமையற்ற நாடாக இலங்கையை கட்டியெழுப்பவும் தனிநபர் வருமானத்தை 20 ஆயிரம் டொலராக அதிகரிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், சம்பள முரண்பாடு நிவர்த்தி செய்யப்பட்டதும் அரச சேவையில் கீழ் மட்டத்தினரின் சம்பளம் 55 ஆயிரம் ரூபாயாக அமையும். அந்த வகையில் வரலாற்றில் ஒருபோதும் இல்லாத வாறான சம்பள அதிகரிப்பாக இது அமையும் - என்றார். (ஐ)

## 6 மாதங்களில் ஏற்றுமதி மூலம் 900 கோடி டொலர் வருமானம்!

கொழும்பு, ஒக. 23

இந்த வருடத்தின் கடந்த ஆறு மாதங்களில் 900 கோடி அமெரிக்க டொலர் ஏற்றுமதி வருமானம் கிடைத்துள்ளதாக முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

அத்துடன், கடந்த ஆறு மாதங்களில் இலங்கை சுமார் 80 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடுகளுக்கான உடன்படிக்கைகளை செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், "இலங்கை முதலீட்டு சபை 15 முதலீட்டு வலயங்களுக்கான வசதிகளை வழங்குவதுடன் அந்த முதலீட்டு வலயங்களில் தற்போது 1,575 நிறுவனங்கள் செயல்பாட்டு பணிகளை முன்னெடுக்கின்றன. இவற்றில் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பணிபுரிகின்றனர். தற்போதைய அரசாங்கத்தின் புதிய முதலீட்டுத் திட்டத்தின் கீழ் 7 புதிய முதலீட்டு வலயங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாதங்களில் முதலீட்டு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி ஏற்கனவே 80 கோடி டொலர் வருமானம் கிடைத்துள்ளது. இதன்போது, 35 முதலீட்டுத் திட்டங்களுக்கான பேச்சுகள் நிறைவடைந்து ஒப்பந்தங்கள் நிறைவேறியுள்ளன - என்றும் கூறினார். (ஐ)

## ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை எமது ஆட்சியில் வெளிப்படுத்துவோம்!

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஒக. 23

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னால் மறைந்துள்ள தலைமைகளை வெளிநாட்டு - உள்நாட்டு நிபுணர் குழுவின் மூலம் விசாரணை நடத்தி வெளிக்கொண்டுவருவோம். அவர்களுக்கான தண்டனையை நிச்சயம் வழங்குவோம் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்காவில் நடந்த பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தினத்தில் கொச்சிக்கடை, கட்டுவாப்பிட்டி, மட்டக்களப்பு மற்றும் பல ஹோட்டல்களின் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பில் இதுவரையும் உண்மை வெளிப்படுத்தப்படவில்லை. இதற்கு தலைமைத்துவம் வழங்கியவர்கள் தொடர்பில் உண்மை வெளிப்படுத்தப்படவில்லை.

அதன் உண்மைத்தன்மையை வெளிப்படுத்துவதாக தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களையும் கத்தோலிக்க சமூகத்தையும் ஏமாற்றியுள்ளார். பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி உண்மைத்தன்மை வெளிப்படுவதை தடுத்துள்ளார்.

உண்மையை வெளிக்கொணர்வதற்காக உள்நாட்டு - வெளிநாட்டு அங்கத்தவர்கள் அடங்கிய குழு ஒன்றை நியமித்து, அதன் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, அதனுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு பெற்றுக் கொடுக்கக்கூடிய அதிகபட்ச தண்டனையை பெற்றுக் கொடுப்பேன்- என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்தை...

பகிர்ந்துகொண்டுள்ள பதிவில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள ளதாவது-

பொலிஸ்மா அதிபர் நியமனம்,வி.எவ்.எஸ் ஆகியவற்றுக்கு எதிரான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாம லிருப்பதன் மூலம் அடிப்படை உரிமை களை மீறியுள்ளது என்ற தீர்ப்பு ஆகியன உயர்நீதிமன்றத்தின் வெளிப்படையான அப்பட்டமான எச்சரிக்கைகள்.

சட்டத்தை நிலைநாட்ட முடியாத அரசாங்கத்தினால் ஒரு தேசத்தை கட்டியெழுப்ப முடியாது.இது நமது ஸ்திரத் தன்மையை உறுதி செய்யும் கட்டமைப்பையே சிதைக்கின்றது.

இந்த சட்டமின்மை எங்களின் பொருளாதாரம்,சமூகம் எங்களின் எதிர்காலம் ஆகியவற்றுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு முன்னர் நாங்கள் செயற்பட வேண்டும். இது முன்னெடுக்க தகுந்த ஒரு போராட்டம் - என்றார். (அ)

## குற்றச்சாட்டுகள்...

துறை, இராஜதந்திரப் பதவிகள் வகிக்கும் நபர்கள் மீது மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகத்தன்மை மிக்க குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டால், அவர்களை அதிகாரத்திலிருந்து நீக்கு தலை முன்னெடுக்கவேண்டும்.

மேலும் அத்தகையவர்களை நியமனம் செய்தலை தவிர்க்கவேண்டும்,

நிலைமாறுகால நீதியை ஏற்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அமைப்பில் அவ்வாறான நபர்கள் இடம் பெற்றிருந்தால் அவர்களை நீக்கவேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது. (அ)

## உள்ளூராட்சி...

செய்திருந்த 4 மனுக்கள் மீதான தீர்ப்பை உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, உயர் நீதிமன்ற நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர, யசந்த கோதா கொட ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

கடந்த வருடம் மார்ச் 9ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்தப்படாமையால், தமது அடிப்படை உரிமைகளும் மக்களின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டுள்ளதாக உத்தரவிடுமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய மக்கள் சக்தி சார்பில் ஹரினி அமரசூரிய, சுனில் ஹந்துன்நெத்தி, பவ்ரல் அமைப்பு சார்பில் ரோஹண ஹெட்டியாராச்சி மற்றும் மாற்றுக்கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மனுக்களில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

மனுக்கள் மீதான விசாரணையை ஜூன் 6ஆம் திகதி முடிவுக்கு கொண்டு வந்த உயர் நீதிமன்றம், தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்திருந்த நிலையிலேயே நேற்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, தேசிய மக்கள் சக்தி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நைஜல் ஹெஜ், மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விரான் கொரயா மற்றும் பவ்ரல் அமைப்பு சார்பில் சட்டத்தரணி அஸ்டிக்க தேவேந்திர ஆகியோர் மன்றில் ஆஜராகினர்.

சட்ட மாஅதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின்புள்ளே ஆஜரானதுடன், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அதன் உறுப்பினர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். (அ)

## தென்னாபிரிக்க...

இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதரகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ் மக்களின் நிலைப்பாடு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்த சாதகத் தன்மைகள் குறித்தும், ஈழத்தமிழர்கள் சார்ந்த அரசியல் முன்னெடுப்புகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, காசாவில் நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ள தென்னாபிரிக்கா, ஈழத்தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப் படுகொலைக்கும் சர்வதேச நீதியைப் பெற்றுத்தர முயற்சிக்க வேண்டும் என்றும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரிலும் இதுவிடயம் சார்ந்து தங்களின் கரிசனையை வெளிப்படுத்த வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், தென்னாபிரிக்கத் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அதிகாரப்...

ஜனாதிபதி ஓர் அவசர விடயமாக இலங்கை நாட்டுக்கென அனைவரையும் அரவணைக்கும் - முன்னெடுக்கும் தேசிய நோக்கை முன்னெடுக்கவேண்டும்.

அத்தோடு முரண்பாடுகளுக்கான மூல காரணங்களை கவனத்தில் எடுத்து ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கும், அரசியல் அதிகாரத்தை பகிர்ந்தளிப்பதற்கும்,பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை மேம்படுத்துவதற்கும் தேவையான அடிப்படையான அரசியல் யாப்பு மற்றும் நிறுவனரீதியான சீர்திருத்தங்களை முன்னெடுக்க வேண்டும்.

இலங்கை ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றை அண்மித்திருக்கும் நிலையில், 2022 ஆண்டில் எதிர்ப்பு தெரிவித்த இலங்கையர்களின் அனைத்து தரப்புகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் பரந்துபட்ட தரப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட நிலைமாற்றுகால நீதிக்கான தன்னை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ளும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்திருக்கின்றது.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல் என்ப வற்றை அண்மித்திருக்கும் நிலையில், 2022 ஆண்டில் எதிர்ப்பு தெரிவித்த இலங்கையர்களின் அனைத்து தரப்புகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் பரந்துபட்ட தரப்பினரால் வேண்டு கோள் விடுக்கப்பட்ட நிலைமாற்றுகால நீதிக்கான தன்னை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ளும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைத்திருக்கின்றது.

தேர்தல் காலத்துக்கு முன்னரும் தேர்தல் காலத்தின் போதும் அதன் பின்னரும் கருத்து சுதந்திரம், அமைப்புகளில் இணையும் சுதந்திரம்,மற்றும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் என்பவற்றிற்கான உரிமைகளை முழுமையாக பாதுகாத்து , அவற்றுக்கு மதிப்பளிக்கவேண்டிய பொறுப்பை அரசாங்கம் கொண்டுள்ளது.

போராட்டக்காரர்களுக்கு எதிரான மிதமிஞ்சிய அளவிலான அல்லது அநாவசியமான பலத்தை பிரயோகிப்பதை தவிர்த்துக்கொள்ளல், மத,பாலின ஏனைய விடயங்களின் அடிப்படையிலான ,பிரிவினைவாத இயல்பிலான மற்றும் பாரபட்ச இயல்பிலான சொல்லாடல்கள் மற்றும் நடைமுறை களை தடுத்தல், தேர்தல் தொடர்பிலான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங் களை என்பவற்றை தடுத்தல் ஆகியவற்றை அது உள்ளடக்கியுள்ளது - என்றுள்ளது. (அ)

# சர்வதேச நாணய நிதியத்தின் உடன்பாட்டில் மாற்றம் நிச்சயம்

## சஜித் மீண்டும் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 23

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் சர்வ தேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கையில் மாற்றங்களை மேற்கொள்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மீண்டும் வாக்குறுதியளித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடனான உடன்படிக்கை பொருளாதார வளர்ச்சி குறித்து கவனம் செலுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தொழில்சார் வல்லுநர்களின் தேசிய பேரவை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனை கூறினார்.

அரசாங்கம் கடன் பேண்தகுதன்மை குறித்து மாத்திரம் கவனம் செலுத்தக் கூடாது,வர்த்தகத்தின் ஏனைய விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தவேண்டும் என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் 2029 இல் 3.1 வீத பொருளாதார வளர்ச்சி என்பதை ஏற்றுக் கொண்டுள்ளன.இது போது மானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் எங்கள் பொருளாதாரத்தை வளர்ச்சிப் பாதையை நோக்கி கொண்டு செல்லவேண்டும் என தெரிவித்த சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தி பொருளாதார சீர்திருதத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கும் எனவும் கூறினார். (அ)

# ரெலிகொம் பங்குகளை விற்க முயலும் அரசாங்கத்தின் நடவடிக்கை தவறானது

## ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர

கொழும்பு, ஓக. 23

தொலைத்தொடர்பு நிறுவனத்துக்குச் சொந்தமான பங்குகளை விற்க அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சி தவறானது என்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சர்வஜன வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் தொலைத்தொடர்பு தொழிற்சங்க பிரதிநிதிகள் குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கை ரெலிகொம் நிறுவன பொறியியலாளர்கள் சங்கத்தின் குழுவொன்று, திலித் ஜயவீர உள்ளிட்ட பிரதிநிதிகளை சந்தித்தது.

இதன்போது, ஜனாதிபதித் தேர்தலின் போது ரெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்யும் அரசாங்கத்தின் முயற்சியை தோற்கடிக்க தலையிடுமாறு கோரப்பட்டது.

இது தொடர்பான கடிதம் ஒன்றையும் திலித் ஜயவீரவிடம் அவர்கள் கையளித்தனர். (எ)

# கொத்துவேலி கவிதை நூல் அறிமுக விழா

கல்முனை, ஓக. 23

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை “76சி” நண்பர்கள் வட்டத்தினதும் கல்முனை வடக்கு கலாசாரப் பேரவையினதும் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண மீன்பிடி பணிப்பாளர் சி. சுதாகரன் எழுதிய “கொத்துவேலி” கவிதை நூல் அறிமுக விழா நாளை சனிக்கிழமை 24 ஆம் திகதி கல்முனை இராமகிருஷ்ண மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உவெஸ்லி உயர்தரப் பாடசாலையின் முன்னாள் அதிபர் வடிவேல் பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நூல் அறிமுக விழாவுக்கு மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் உதவிப் பொது முகாமையாளர் சுவாமி சுரார்ச்சிதானந்தர் ஆன்மீக விருந்தினராகவும், மேலதிக மாகாணப் பணிப்பாளரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமாகிய வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (எ)

## நமக்காக...

காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கும் இந்த பயணம் தொடர்ந்து பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி, தொண்டைமானாறு, வளலாய், பலாலி, தையிட்டி, காங்கேசன்துறை ஆகிய இடங்களின் ஊடாக நகரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களுக்கும் இந்த பிரசாரப் பயணம் செல்லவுள்ள நிலையில் ஏனைய பகுதிகளுக்கும் மக்களின் அழைப்பின் பெயரில் ஏனைய பிரசாரப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. (அ)

## 35 நாடுகளின்...

அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் 06 மாத காலத்துக்கு இந்த வாய்ப்பு குறித்த நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலவச விஸா வசதியின் கீழ் இலங்கைக்குப் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட நாடுகளின் பட்டியலில்,

ஐக்கிய இராச்சியம் ,ஜேர்மனி, நெதர்லாந்து பெல்ஜியம், ஸ்பெயின், அவுஸ்திரேலியா, டென்மார்க், போலந்து , கஸகஸ்தான் ,சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், நேபாளம் ,சீனா ,இந்தியா ,இந்தோனேசியா, ரஷ்யா, தாய்லாந்து, மலேசியா, ஜப்பான், பிரான்ஸ் ,அமெரிக்கா, கனடா, செக் குடியரசு, இத்தாலி , சுவிட்சர்லாந்து, ஆஸ்திரியா ,இஸ்ரேல், பெலாரஸ், ஈரான் ,சுவீடன், தென் கொரியா, கட்டார், ஓமான் ,பஹ்ரைன், நியூசிலாந்து ஆகிய நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புதிதாக...

வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கை இராணுவம் தன்வசம் வைத்திருக்கும் காணிகளை விடுவித்தல்,வடக்குகிழக்கில் புதிதாக காணிகளை கைவசப்படுத்தலை நிறுத்துதல், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரைம் விடுதலை செய்தல், பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் நினைவேந்தல் முயற்சிகளில் ஈடுபடுவதையும் குற்றச்செயல்களில் இருந்து நீக்கி, அவற்றுக்கு ஆதரவளித்தல் போன்ற நம்பிக்கையை கட்டியெழுப்பும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிலைமாற்றுக்கால நீதிக்கான சூழலை உருவாக்கவேண்டும்.-என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



## தமிழ் பொதுக் கட்டமைப்பினரை சந்தித்தார் சுவிற்ஸர்லாந்து தூதுவர்

யாழ்ப்பாணம், ஒக. 23

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இலங்கைக்கான சுவிற்சலாந்து தூதுவர் சிரி வோல்ட்க்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார்விடுதி ஒன்றில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, தழிமீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவர் சித்தார்த்தன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் , அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், யாழ். மாநகர முன்னாள் மேயர் மணிவண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

## விவசாய செய்கைக்கு 15,000 ரூபாய் மானியம்!

கொழும்பு, ஒக. 23

எதிர்வரும் பெரும்போகத்திற்காக நெற்செய்கை உள்ளிட்ட ஏனைய விவசாய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக ஒரு ஹெக்ரேயருக்கு 15,000 ரூபாய் மானியம் வழங்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இரண்டு ஹெக்ரேயர் விவசாய நிலத்திற்காக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக இந்த மானியத்தை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## பழமைவாதத்தை கைவிடவேண்டும்!

### அழைக்கிறார் சஜித்

கொழும்பு, ஒக. 23

வழக்கமான கட்டத்துக்குள் இருந்து கொண்டு காலாவதியான பழமைவாத சிந்தனைகளுக்குள் இல்லாமல் நவீன முறையில் சிந்திக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாம் ஒரு பன்முகப்படுத்தப்பட்ட சூழ்நிலையை எதிர்கொண்டுள்ளோம்.

கடன், தொழில்துறையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, நாட்டின் பொருளாதாரம், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறை என ஒவ்வொரு துறையும் பாதிப்படைந்துள்ளன.

குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் தாய்மார்களின் உரிமைகள் மீறப்படுகின்றன. 52 சதவீதமாக உள்ள பெண்கள் வீடுகளிலும் வீதிகளிலும் வேலைத்தளங்களிலும் அழுத்தங்களுக்கும் வன்முறைகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலை அதிகரித்துள்ளது. இந்தப் பிரச்னைகளுக்கு வழமை போன்று தீர்வு காண முடியாது. வழமையான சிந்தனைப் போக்கிலிருந்து வெளியேறி ஆக்கபூர்வமாக சிந்தித்து, தரவுகளையும் சாட்சிகளையும் மையப்படுத்திய கொள்கை திட்டங்களைத் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்தவேண்டும் - என்றார். (அ)

# ஐ.எம்.எவ். ஒப்பந்தத்தை மாற்றினால் கிடைக்கும் நிதியை இழக்க நேரிடும்!

### ஜனாதிபதி ரணில் எச்சரிக்கை

கொழும்பு, ஒக. 23

**சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்துள்ள உடன்படிக்கை தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என சில ஜனாதிபதி வேட்பாளர்கள் மேடைகளில் கூறிய போதிலும், அவ்வாறு செய்வதால் நாட்டுக்கு கிடைக்கவேண்டிய பணத்தை இழக்க நேரிடும் என்றும் மீண்டும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் நிலை ஏற்படும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை நிபுணர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'தேசத்தின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இச்சந்திப்பில் பேராசிரியர் சிறிமல் அபேரத்ன சிறப்புரையாற்றினார்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில்-

நாம் ஒரு நெருக்கடியை மாத்திரம் சந்திக்கவில்லை. நாம் இரண்டு நெருக்கடிகளை எதிர்கொண்டோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். முதலாவதாக, கோவிட்-19 நோய்த்தொற்று மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் நாம் பாதிக்கப்பட்டோம். இந்த நிகழ்வுகள் ஒன்றோடொன்று தொடர்புடையவை.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட வரிக் குறைப்புகள் போன்ற கோவிட் தொற்றுக்கு முன்னர் நாங்கள் எடுத்த நிதி நடவடிக்கைகள் வருமானம் குறையக் காரணமாகியது. அந்த சூழ்நிலையில், எமது சவால்கள் மிகவும் சிக்கலானதாக மாறியது.

நாடு இவ்வாறானதொரு நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருந்த போது நாம் எச்சரித்தோம். துரதிர்ஷ்டவசமாக, இந்த எச்சரிக்கையை ஒரு சிலர் மாத்திரமே கண்டுகொண்டார்கள். அன்று முன்வைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக இந்த நெருக்கடி தொடர்பில் மக்களுக்கு சுட்டிக் காட்டினோம்.

எதிர்காலத்தில் இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி ஏற்படாமல் தடுக்க 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை என தெரிவித்தோம். எனினும், அன்று நாம் விடுத்த இந்த எச்சரிக்கை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டது. ஏனைய குழுக்கள் யதார்த்தமற்ற வாக்குறுதிகளை அளித்தன. உலகளாவிய கோவிட் நோய்த் தொற்று நமது நிலைமையை மேலும் மோசமாக்கியது. 2020 மற்றும் 2021 இல் உலகப் பொருளாதாரத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. நாம் இன்னும் அதிலிருந்து மீண்டு வருகிறோம்.

நாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு இந்த உலகளாவிய பின்னணியும் காரணமாக அமைந்தது. நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்குத் தேவையான இந்த மாற்றங்களை என்னால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது - என்றார். (அ)

## பிரசாரக் கூட்டங்களுக்கு இ.போ.ச. பஸ்கள் வழமையான சேவைக்கு இடையூறு இல்லை

கொழும்பு, ஒக. 23

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்காக பஸ்கள் பயன்படுத்தப்பட்ட போதிலும், வழமையான போக்குவரத்துக்கு இதுவரை எவ்வித இடையூறும் ஏற்படவில்லை என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

பஸ்களுக்கான பற்றாக்குறை தொடர்பில் பொதுமக்களிடமிருந்து எவ்வித முறைப்பாடுகளும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் குறிப்பிட்டார்.

கிராமப்புறங்களில் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் தேர்தல் கூட்டங்களுக்கு வழங்கப்படமாட்டாது எனவும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் நிறைவடையும் வரை பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் பஸ்கள் வழங்கப்படும் எனவும் அல்விஸ் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவையான பஸ்களுக்கான செலவுகள் தொடர்பான அறிக்கையை இலங்கை போக்குவரத்துச் சபை தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் வழங்கியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அண்மையில் வழங்கப்பட்ட அறிவிப்புக்கு அமையவே இலங்கை போக்குவரத்துச் சபையினால் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. (அ)

### தமிழ் இனப்படுகொலை சின்னம்

## இலங்கை அரசாங்கத்துக்கு கனடாவில் கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஒக. 23

இலங்கை அரசாங்கத்துக்கு கனடாவில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் நிர்மானிக்கப்படும் தமிழ் இனப்படுகொலை நினைவிடத்துக்கான கட்டுமானப் பணிகள் தொடர்பில் இலங்கையின் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை அல்ல என பிரம்டன் நகர முதல்வர் பற்றிக் பிரவுன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அந்நாட்டு வெளிவிவகார அமைச்சருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கைக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, பிரம்டன் நகரில் நிர்மாணிக்கப்படும் இந்த நினைவுச் சின்னத்துக்கு இலங்கையின் எதிர்ப்பைத் தெரிவித்து, இலங்கைத் தூதரக அதிகாரி துஷார ரொட்ரிகோ, நகர முதல்வருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

அத்துடன், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் கனேடிய தூதுவரை அழைத்து இலங்கையின் எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தார்.


இந்நிலையில், இலங்கையின் தீர்மானங்களை புறக்கணிக்க பிரம்டன் நகரசபை அதிகாரிகள் தீர்மானித்துள்ளதாக முதல்வர் பற்றிக் பிரவுன் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

“இலங்கையில், தமிழ் சமூகம் தங்கள் அன்புக்குரியவர்கள் மற்றும் மாவீரர்களை நினைவுகூருவதைத் தடுக்க அரசாங்கம் முயற்சி செய்யலாம். ஆனால் கனடாவில் அவர்களால் அதைச் செய்ய முடியாது.

கனடாவில் நினைவேந்தல் நிகழ்வுகளை தடுக்க முயல்வது உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யும் செயல்” என்று அவர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பாடசாலை வகுப்பறை மீது முறிந்து விழுந்த மலைவேம்பு

யாழ்ப்பாணம், ஒக. 23



யாழ்ப்பாணத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக உரும்பிராய் பகுதியில் உள்ள சைவத் தமிழ் வித்தியாலயத்தின் வகுப்பறை மீது மலை வேம்பு ஒன்று முறிந்து விழுந்ததாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

இதனால் பாடசாலையின் கூரை பகுதி சேதமடைந்திருப்பதாகவும், மரத்தை வெட்டி அகற்றுவதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.